KALANILAYAM.
REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11. VELLALA STREET.

Purasawalkam MADRAS.

29082

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் **கலா நிலயம்** செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A .B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஒதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீட்ஷேன் எபிகூரன் ஜீனோன், பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஒப்பு ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாயினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தனுர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைந்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்கயம் காட்டிநவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—	பைபின்டு செய்யாதது	உள்நாடு ரு 8—0—0	வெளிநாடு ரு 9—8—0
	ஆப்லெதர் கில்டுபயின்டு	உள்நாடு ரு 10—0—0	வெளிநாடு ரு 11—8—0
	காலிகோ பயின்டு	உள்நாடு ரு 9—8—0	வெளிநாடு ரு 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)

AMSBKN
24.2.47

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF ... 3- JAN 1930 ... MAD.

Vol 2.] 1929 ௵ நவம்பர் ௴ 28உ [No. 47.

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader).	921
2.	அப்பர். (நாடக வியல்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L.	923
3.	நம்மாழ்வார் வைபவம் (திருவாய்மொழி) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L.	925
4	தமிழ்ப் பாடம் (திருவரங்கக்கலம்பகம்)	928
5.	மானத சாத்திரம் (நாம்புகள்) T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A. B. L.	930
6.	வில்லிபாரத விளக்கம் (சூதுபோர்ச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை. B.A., B. L.	931
7.	கம்பராமாயணம் (கோலங்காண் படலம்) T. N. சேஷாசலம் B. A , B. L.	933
8	வர்த்தமானம்	939

கலா நிலயம்

கல்சரை அடையும் வகை

VI

கல்சார்நிலை எய்துதற்கு இணையிலாத்துணையாய் உடனின்றுதவுவன மேலோரருளிய நூல்கள். இதனை உரைக்கவந்த நாம், கண்டதைப் படிப்பதெல்லாம் கல்வியாகாதென விலக்கிக்காட்ட முயலலுற்றோம். தொன்மையொடு தூய்மையும் தங்கியுள சான்றோர் நவின்ற நூல்களே பயின்றுவருதற் குரியன. இவையன்றி, யாதொன்றுங் கல்விநலமில்லாதார்தம் மடமையில் முதிர்ந்து வெளிவரும் நாவல்களும் கட்டுரைகளும், இவையனைய கணக்கில் பல்வேறு புத்தகங்களும், பாடல்களும், பண்பில பயனுமில. கையோயாமல் இவைகளையெழுதுவார் தம்மைஆசிரியரென்றும், படிப்பார் தம்மைக் கல்வியாளரென்றுங் கருதிக்கொளல் பெரிது மிரங்கத்தக்கதே. இதனைச் சிறிதறிவுடையோரும் எளிதி லுணர்ந்திருக்கின்றனர்.

வர்த்தமானபத்திரிகைகளும்நமதுகலாசாலைகளும் கல்விநலம் கலந்துள வென்னுமோர் எண்ணம் எங்குங் குடிகொண்டிருக்கின்றது. கல்சருக்கோர் கைத்துணையாய் அமைவதே கல்வியின் இலக்கணமாதலால், இப்பத்திரிகைகள் பெரும்பாலும் கல்சருக்கு எதிராய் எத்திறத்திலும் இயங்கிவருதல்பற்றி அவை கையாளுதற் குரியனவல்ல வென்று தெருட்டவேண்டியவ ராயினோம். ஏனெனிற்பற்பலர் வர்த்தமானப்பத்திரிகைகளைப் படிக்கின்ற திறமையைப் பெற்றதோடு கல்விமுற்றிய கனவான்க ளாகிவிட்டதாக மதிக்கலாகின்றனர். இப்பொழுது "கிராம புனருத்தாரணம்" என்றொரு சொற்றொடர் எல்லார்நாவிலும் நடமாடிக்கொண் டிருக்கின்றது. அதன்படி, கிராமந்தோறும் வாசகசாலைகள் அமைத்து வர்த்தமானப் பத்திரிகைகள் வரவழைத்துக் கிராமவாசிகள் அதனை விடாமல் படித்திருக்கப்பழக்கப்பெறுவாராயின் 'புனருத்தாரண' வேலையின் பெரும்பகுதி செய்யலாயிற்றென்று எங்கெங்கும் சொல்லக் கேட்கின்றோம். இம்முயற்சி நல்லஎண்ணத்தால் தூண்டப்படுகின்றதேனும், முறையின் நன்மை முழுவதும் அயிர்த்தற்கிலக்கானதே என்பது நாமிதுகாறும் வகுத்துரைத்தவைகளால் விளங்குதல்வேண்டும். வர்த்தமானபத்திரிகைகளை வாழ்நாள்முழுதும் வாசித்த வருகின்றவர்களில் எத்தனைபேர், பொறை அறிவு ஈகை வாய்மை முதலிய நற்குணங்களோடு மனிதர் இருக்கவேண்டியபடி இருக்கின்றனர் என்பதை எண்ணிப் பார்த்தபின் ஏதும் இயம்புவது நலம். கிராமத்தில் வசிப்பவர்களுள் சிற்சிலரேனும் இன்றைக்கும் பொய்வாழ்க்கை வாய்ப்பட்டுழலாமல் தம் இயற்கை நற்குணங்களோடு நன்கு வாழ்கின்றனர். அன்னவர் வந்து நம் நகரங்களைப் 'புனருத்தாரணம்' செய்ய அருளுவாராயின் அதுவே முறையென இயம்பல் வேண்டும். இதனால் நம்மிடை இந்நாளிருக்கின்ற தீமைகளுக்கெல்லாம் காரணம் வர்த்தமானப் பத்திரிகைகளே என்று விளம்பும் கருத்துடையேம் என்று எண்ணவேண்டா. உயிர்க்குரிய உண்மையாய நன்மையொன்றும் அவை நடத்திவைப்பதில்லை என்பதோடு, வேறெக்காரணத்தினாலேனும் விளைந்ததீமைகளைப் பரவச்செய்கின்றன

18908?

8L
MM24/N28KN
24.2.47

வென்பதும் நாம் அவைகளின்பால் காண்கின்றகுறை. மனிதனது அமைப்பில், பண்டிருந்து தொடர்ந்து வருகின்ற மிருகத்தன்மையும், மேனுளினி எய்தவேண்டிய திப்பியநோக்கமும், ஆகிய இரண்டும், ஒவ்வோரளவுகலந்திருக்கின்றன. இவைகளில்,மனிதனுக்குள்ளிருக்கும் மிருகத்துடன் உறவாடி அதனையே ஊட்டி வளர்த்துக் கொழுக்கச்செய்வதெல்லாம் கல்சருக்கு விரோதமானவை. கொழுத்துத்திரியும் இவ்விலங்கு, தன்னொடுபிறந்தும் வளர்ப்பாரின்றி இளைத்திருக்கும் தெய்வசிந்தனை தருமசிந்தனை முதலிய அம்சங்களை அடித்துத் தின்றுவிடுகின்றது. இல்லையெனில், ஒரு நாளல்லாக்கால் ஒருநாள் இக்கல்சரம்சங்கள் தாமே தம் இயற்கைச்சாதனங்களைக்கொண்டு தலையெடுத்து விலங்கினைத் தன்வயமாக்கி நடத்தினும் நடத்தலாகலாம். ஆதலின் கல்சரின் மெய்ந்நிலையை உணர்ந்து அதன் வளர்ச்சிக்குரியவற்றை முயன்று செய்யாராயினும் ஆக,-விலங்கையேனும் கொழுக்கவையாம லிருத்தலே பேருதவியாகின்றது.

ஆரம்பமுதல் அந்தம்வரையினு முள்ள நம்முடைய இந்தப் பேர்ப்பான பாடசாலைகளும் கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் மாந்தரது மெய்வாழ்விற்கு விரோதமாகவே இருக்கின்றன. "நம்முடைய" என்றதால், இந்த நாட்டின் கல்விமுறைகளிலுள்ள குறைகளையே கருத்திற்கொண்டு இது இயம்புகின்றோம் என்றெண்ணலாகாது. இக்காலம் உலகெங்கும் நடைபெறுகின்ற கலாசாலைகள் யாவற்றையும் உள்ளடக்கியே இது உரைக்கின்றோம். இவைகளால் தீதொழிய நலமென் றிருக்கும்பாகம் நினைப்பதற்கும் பற்றாது. ஆதலின், படித்தவர் படிக்காதவர் தொகைகளின் மிகுதி குறை காட்டிக்காட்டிப் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் நிறுவமுயல்வதெல்லாம் நல்வாழ்வு வளருமா றமைந்த நந்தனவனங்க ளல்ல — கல்சரை வதைத்தொழிக்குங் கொலைக்களங்களே யவை. இவ்வுரை, தன்னெனை எழும்பும் வியப்பைத் தூண்டலாம்; எனினும் உண்மையே. சிற்சிலபோது, உண்மையே பொய்யினும் வியக்கற்பால தாகின்றது.

இது உண்மையே என்றுணர்வதற்கு முதலிலேயே ஒன்று மறவாதிருந்தால் போதுமே. எது கருதி இப்பாடசாலைகளைத் தேடி அடைகின்றனர்? நாவின் நுனியிலிருந்து வழிகின்ற வார்த்தைகள் சில, கல்வியும் அதனுல் வரும் குணம் ஒழுக்கம் அறிவு முதலியவைகளையும் பெறுவதற்கென்று பகரலாம். எனினும் அவையனைத்தும் வம்பே. வயிற்றிற்கு வழிதேடியே ஆசிரியர் மாணவர் இருவரும் பெரும்பாலும் பாடசாலைகளுக்குள் நுழைகின்றனர். ஓதும் பாடத்திற்கெல்லாம் பயன் பணத்திலேயே காணவேண்டும் எனின் வேறு பல விளம்புவானேன். நம் கலாசாலைகளில் கற்றுத்தேர்ந்து பட்டமும் பெற்றனராய் உத்தியோகங்களிலும் உயர்தரத் தொழில்களிலும் ஊடாடுவாரை உற்றுநோக்கினுல், நயமாயிருக்கின்ற அவர் நடையுடை பாவனைகளுக்குள், பொய்யும் வஞ்சனையும் உலோபமும் பொறாமையும் வன்னெஞ்சும் பொல்லா ஒழுக்கங்களும், இலஞ்சமும் துரோகமும், சுயநயப் பேயின் தலைவிரிகோலமும், மதுவும் விபசாரமும் குதிரைப்பந்தயமும் எல்லாம் இருக்கக்காணலாம். இத்தனையும் கல்சர் இல்லாதார் குணங்கள். இவர்களைக் காணுமிடத்துக் கல்லாதபேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்! இன்னுர் வீண்காலம் கழிக்கின்ற விதங்களைக் காணவும், பயனிலாப் பேச்சுகளைக் கேட்கவும், பேயும்பின்னிடப் புரிகின்ற பற்பல செயல்களை நினைக்கவும், சான்றோர் பலர் இவ்வுலகநிலைக்கிரங்கி நெடிதுயிர்த்துக் கண்ணீர் வடிப்பார். தம் வாய்கொள வெறுத்துரைப்பார் சிலர். தன்னுடைய கருத்தைத் தட்டின்றி வன்மையோ டுரைக்கும் வழக்கம்வாய்ந்த ஆங்கில அறிஞர் பர்ணுர்ட் ஷா என்பவர், இங்கிலாந்து நற்கதி அடையவேண்டுமாயின் உடனே ஆக்ஸ்பர்ட் கேம்ப்ரிட்ஜ் முதலிய இடங்களிலுள்ள கலாசாலைகளை இடித்துத் தரைமட்டமாக்க வேண்டுவது அவசியமென்று இரண்டொரு வாரங்களுக்குமுன் விளம்பினுரெனத் தெரிகின்றது. வேறெதற்கு மல்லாவிடினும் இவ்வாசகத்திற்காக அவரை நல்லறிவுடைய மேலோர் யாவரும் முழுமனதோடு வாழ்த்துவார் என்பது திண்ணம். ஆக்ஸ்பர்டையும் கேம்பிரிட்ஜையும் பார்த்துப்பார்த்து இங்கிருப்பவர் சர்வகலாசாலைகள் அமைக்க முயல்கையில் அங்கிருப்பவர் ஒருவர் அவைகளை இடித்தலே கருமம் என்பதனினும் கூரிய வசை பொய்க்கல்வி போதிக்கவே பலவாறு முயல்வார்க்கு வேறு வேண்டுமோ!

இவ்வண்ண நாமிங்குக் கலாசாலைகள் கொடியன என்று பேசுமிம் முறை மிகுதிபற்றி நிகழ்கின்றதென்பது வெளிப்படை. இக்காலாசாலைகளில். போதிக்கின்றவர்களிலும் படித்துத் தேறி வருகின்றவர்களிலும் ஆயிரத்தி லொருவரேனும் நல்லவர்களாயிருக்கலாமென்பது மறுக்கற்பாலதன்று. ஆயினும், தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரைக் கெடுக்கின்ற பொறுப்பு இக்கலாசாலைகளைச் சார்ந்திருக்கின்றதே யன்றி, நல்லவரா யிவ்வொருவர் இருக்கின்ற பெருமைக்கு அவை பாத்திரமாகா. கலாசாலைகள் செய்யும் இடையூறுகளை யெல்லாங் கடந்து ஒருவர் கல்சர் அடைந்தாரெனின் அவர் புரிந்துள பாக்கியம் பெரியதா யிருத்தல்வேண்டும். பெற்றோரின் நற்குணமோ, அவர் வளர்ந்த குலத்தின்மரபோ, ஒருகால் அவரது ஆசிரியர்களுள் ஒருவரது உண்மையறிவோ, இந்நன்மைக்குக் காரணமாயிருக்கலாமே யன்றிக் கலாசாலையாவது, அதனில் கற்பிக்கும் பாடங்களாவது, அவைகளைக் கற்பிக்கும் முறைகளாவது, அங்கிருந்து உடன்பயில்வோர் உறவாவது, மற்றக் கல்வியைப்பற்றிப் புறத்தே நடமாடும் நோக்கங்களாவது ஒருபோதும் அவரது இயற்கையம்சங்களாகிய தெய்வபக்தி தருமசிந்தனை பகுத்தறிவு என்னுமிவைகள் வளர்வதற்குரிய துணைகளோ ஆகா. கலாசாலைகளில், அரைக்கால் கால் அரை முக்கால் முழுப்படிப்புப் பெற்றிருப்பவர்களோடு, சீமைக்குச் சென்று தம் படிப்பிற்கு மெருகு மிட்டுக்கொண்டு வந்திருப்பவர்களையும் ஒன்றுய்ச்சேர்த்து ஒருபுறமும், இன்னவர்களோடு அதிகம் கலாவாமலும் இப்பள்ளிக்கூடப் படிப்புக்கொள்ளாமலும் இருக்கின்ற கிராமவாசிகளை மறுபுறத்தும் வைத்துச் சீர்தூக்கிப் பார்த்தால், முன்னவர்களைவிட இப்பின்னவர்கள் ஆளுக்கு ஆள், கருணை அன்பு ஈகை தெய்வபக்தி தருமத்திற்கஞ்சி நடத்தல் மானம் முதலிய குணங்களால் மேன்மை யுற்றிருப்பதுமல்லாமல், முழுமைக் கணக்கில் இவர்களுடைய வாழ்க்கைமுறையும் குடும்பச் சிறப்பும் எல்லாப்படியாலும் உயர்ந்திருக்கின்றன வென்பதை மறுக்க முன்வருவா ரிலர். இவ்வாறு இருப்பதன் காரணங்கள் கண்ணுடையோர்க்கெலாம் மலையிலக்காய்நிற்கின்றன. ஆதலின், சர்வகலாசாலைப் பட்டம்பெற்றவர்களிலும் இரண்டொருவர் உயர்ந்த குணமுடையவரா யிருக்கக்கண்டு, "கலாசாலைகள் கெடுக்குமென்றுல் இவர்களுமன்றோ கெட்டிருத்தல் வேண்டு'மென ஐயப்பாடடைய வேண்டா. இவர்களைக் கெடுக்கக் கலாசாலையாலும் இயலவில்லை; அவ்வளவே. கலாசாலைகள் நன்மைசெய்யுமெனில் அதனிற் படித்தவர் ஒருவரும் கெடப்படாதன்றோ, என வினவுவதே தர்க்கமுறை. தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதுபேரைக் கெடுக்கு மிது, ஒருவனைக் கெடுத்திடாததால், கெடுக்குந்தன்மை இதன்பால் இல்லையென்றும், கெட்டதெல்லாம் கெட்டவர் பிழையேயன்றி இதன்குறை யன்றென்றுங் கருதலாகாது. தேள்கொட்டினுல் ஆயிரத்திலொருவருக்குக்கடுப்பதில்லை. எனின் இவ்வொருவரைக் கொண்டு தேளுக்கு விஷமில்லை என்று துணிந்து அதனைத் தீண்டுவா ருளரோ!

அப்பர்

7. அப்பரும் நாடக வியலும்

[904 வது பக்கத் தொடர்ச்சி]

V. கூத்தின் சிலபாத்திரங்கள்: அவற்றின்தொழில்கள்.

(ii) வாரப் பாத்திரங்கள்.

வையகத்தில் எங்கும் சிவபெருமான் திருநடனம் செய்யினும் அதன் விசேடமலியக் கண்ணுரக்காணக் கூடிய இடம் தில்லையாகும். அங்கே ஆடும் எரியானது போலித்தீ யன்று. தீமைகள் யாவும்*பஸ்மம் செய்யும் அனலெரி, துளங்கெரி, மிகவும் நீண்ட எரியாம். அது செய்யெரி, அவர் கையெரியாயினும் கனலெரி யென்பர். துஞ்சிருள் கிழியத் துளங்கும், "அருத்தமா மேனிதன்னேடனலெரியாடும்அதிசயம் காணீர்" என்பதுபோல் அப்பர், கோயில் திருநேரிசைத் திருப்பதிகமொன்றில் இப்பொதுவின் ஆடலைப் பகர்கின்றார். அப்பர் திருவாக்கை யொக்க வேறுமொழிகளால் விளக்குவது அசாத்தியமான காரியமாதலானும், அவர் திருப்பதிகம் திரிசொற்கள் கலவாது பாடப்பட்டமையாலும், ஒவ்வொரு செய்யுளும் பொதுவிய விலக்கணங்களைச் சிறிதுசிறிது குறிப்பிடுதலானும், அப்பர் பதிகத்தின் பதினொரு செய்யுட்களையும் சற்று நோக்குவோம்:—

[சென்னி
"செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா வெறிக்கும்
நஞ்சடைக் கண்ட னுரைக் காணலாம்"

என்பது முதனடையாகும். வழிபடும் தொண்டனுக்கு அநுபவமுதிர்ந்த தொண்டன் செப்புவது, தேரியமடந்தை யொருத்தி வாரம்பாடுதல் போலும், இளையவளான தலைக்கோலரிவை ஐந்துமண்டல நிலையினின்று கேட்பதுபோலும் உருவகப்படுத்தியதை இச்செய்யுள் மிகுதிபாகத்தானும் ஏனையபின்வருஞ் செய்யுட்கள் பத்தானும் காண்க. இச்செய்யுளில் எஞ்சியபாகம்

...."நறவமாறு
மஞ்சடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
துஞ்சடை யிருள்கிழியத் துளங்கெரி யாடுமாறே" 1

என்பது வாரப்பாடல். இயக்கம் நால்வகைப்படும். அவை, முதனடை வாரம்;* கூடை.† திரள் எனப்படுவன. முதனடை (Musical Preamble) மிகவும் தாழ்ந்த செலவினை யுடையது. திரள் மிகவும் முடுகிய நடையினையுடையது. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட வாரப்பாடல், சொல்லொழுக்கமும் இசையொழுக்கமுமுடையது. கூடைப்பாடல் சொற்செறிவும் இசைச்செறிவு முடையதென்பர் இசைவல்லோர். இங்கு அப்பர் முதற்செய்யுளில் முதனடை ஆரம்பித்துப் பிறகு வாரம்தொடங்குகின்றார். படிப்படியாய் இப்பதிகத்தில் இசை வளர்வதை நாடகவியலில் "வாரநிலத்தைக் கேடின்றி வளர்த்தல்" என்பர். இவ்வாறு வார இயக்கத்தின் விருத்தியை ஏனைய செய்யுள்களிற் காண்க:—

முதல் வாரம் (ஓரொற்று வாரம்)

ஏறனு ரேறு தம்பா விளநிலா வெறிக்குஞ் சென்னி
ஆறனு ராறு சூடி யாயிழை யாளோர் பாக
நாறுபூஞ் சோலைத் தில்லை நவின்றசிற் றம்ப லத்தே
நீறுமெய் பூசி நின்று நீண்டெரி யாடு மாறே. 2

சடையனுர்சாந்தநீற்றர் தனிநிலா வெறிக்குஞ்சென்னி
யுடையனுருடைதலையி லுண்பதும் பிச்சை யேற்றுக்
கடிகொள்பூந் தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற்றம்பலத்தே
அடிகழ லார்க்க நின்று வனலெரி யாடு மாறே. 3

பையர வசைத்த வல்குற்
பனிநிலா வெறிக்குஞ் சென்னி
மையரிக் கண்ணி னுளு
மாலுமோர் பாக மாகிச்
செய்யெரி தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்ப லத்தே
கையெரி வீசி நின்று
கனலெரி யாடு மாறே 4

ஓதினுர் வேதம் வாயா
லொளிநிலா வெறிக்குஞ் சென்னிப்

---

* அல்ல லென்செயு மருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொண்டன்று னென்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே ?
கோயில் திருக்குறுந்தொகை 4.

* "வார மென்பது வகுக்குங் காலை
நடையினு மொலியினு மெழுத்தினு நோக்கித்
தொடையமைர் தொழுகுர் தொன்மைய தென்ப"

† "கூடை யென்பது கூறுங் காலை
நான்கடி யாகி யிடையடி மடக்கி
நான்கடி யஃகி நடத்தற்கு முரித்தே."

பூதனார் பூதஞ் சூழப்
புலியுரி யதள னார்தா
நாதனார் தில்லை தன்னு
ணவின்றசிற் றம்ப லத்தே
காதில்வெண் குழைக டாழக்
கனலெரி யாடு மாறே. 5

ஒருடம் பிருவ ராகி
யொளிநிலா வெறிக்குஞ் சென்னிப்
பாரிடம் பாணி செய்யப்
பயின்றவெம் பரம மூர்த்தி
காரிடந் தில்லை தன்னுட்
கருதுசிற் றம்ப லத்தே
பேரிடம் பெருக நின்று
பிறங்கெரி யாடு மாறே. 6

2-ம் வாரம் * (ஈரொற்று வாரம்)

முதற்றனிச் சடையை மூழ்க
முகிழ்நிலா வெறிக்குஞ் சென்னி
மதக்களிற் றுரிவை போர்த்த
மைந்தரைக் காண லாகு †
மதத்துவண் டறையுஞ் சோலை
மல்குசிற் றம்ப லத்தே
கதத்தோ ரரவ மாடக்
கனலெரி யாடு மாறே! 7

மறையனார் மழுவொன் றேந்தி
மணிநிலா வெறிக்குஞ் சென்னி
இறைவனா ரெம்பி ரானா
ரேத்துவா ரிடர்க ளைப்பார்
சிறைகொணீர்த் தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்ப லத்தே
அறைகழ லார்க்க நின்று
வனலெரி யாடு மாறே. 8

விருத்தனாய்ப் பால னாகி
விரிநிலா வெறிக்குஞ் சென்னி
நிருத்தனார் நிருத்தஞ் செய்ய
நீண்டபுன் சடைக டாழக்
கருத்தனார் தில்லை தன்னுட்
கருதுசிற் றம்ப லத்தே
அருத்தமா மேனி தன்னோ
டனலெரி யாடு மாறே. 9

பாலனாய் விருத்த னாகிப்
பனிநிலா வெறிக்குஞ் சென்னிக்
காலனைக் காலாற் காய்ந்த
கடவுளார் விடையொன் றேறி
ஞாலமாந் தில்லை தன்னு
ணவின்றசிற் றம்ப லத்தே
நீலஞ்சேர் கண்ட னார்தா
நீண்டெரி யாடு மாறே 10

மதியிலா வரக்க னோடி
மாமலை யெடுக்க நோக்கி
நெதியின்றோ னெரிய வூன்றி
நீடிரும் பொழில்கள் சூழ்ந்த
மதியந்தோய் தில்லை தன்னுண்
மல்குசிற் றம்ப லத்தே
அதிசயம் போல நின்று
வனலெரி யாடு மாறே. 11

இவ்வாறு உருவகத்தில் இருபக்கத்திலும் வாரம் பாடத் தில்லைச் சிற்றம்பலத்திற் கூத்தன் "கைந் நின்ற வாடல் கண்டாற் பின்னைக் கண்கொண்டு காண்ப தென்னே ?" என்பர் அப்பர். ஏனெனில் இந் "நட்டம் ஆட வெடுத்திட்ட பாதமன்றோ நம்மை யாட்கொண்டதே ?"

கருமானி னுரியதளே யுடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்தொலிப்ப வனல்கை யேந்தி
வருமானத் திரடோள்கண் மட்டித் தாட
வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி
அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண
வமரர்கண முடிவணங்க வாடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே !

இங்ஙனம் நடமாடுவதற்குப் பேய்கள் பாடும்; பிஞ்ஞகன் பேயோடாடி யாதலால், இவற்றைச் சீர்திருத்துமுறையில் இசையே நற்கருவியாதலால், பல விசைக் கருவிகளுடனும் பண்கள் அமைவுடனும் அப்பேய்கள் வாழும் காட்டகத்துத் தானே சென்று அவற்றுடன் கூடியாடல் கருணாநிதியின் இலக்கணமாம் :—

"கொட்டுமுழ வாவத்தொடு கோலம் பல வணிந்து
நட்டம் பல பயின்றாடுவர் "

திருநெய்த்தானம் - திருவிருத்தம் 4.

காடிட மாகநின்று கனலெரி கையிலேந்திப்
பாடிய பூதஞ் சூழப் பண்ணுடன் பலவுஞ் சொல்லி
ஆடிய கழலர் சீரா ரந்தணெய்த் தான மென்றும்
கூடிய குழக னாரைக் கூடுமா றறிகி லேனே.

திருநெய்த்தானம் - திருநேரிசை 5

இவர் ஆடும் நட்டம் பல; அவற்றிற்கு ஏற்கும் கோலம் பல.* "கூளிபாடக் குறட்பூதங் கூத்தாட"த் தானும் ஆடுவார்.

(iii)மாத்திரை வருக்கம்.

இவ்வாடல்களில் மாத்திரையாவது யாது ? இயற்றமி ழிலக்கணத்திற் கூறும் கண்ணிமைப்பொழுதும், கைநொடிப் பொழுது மல்ல. நாடகத்தில் மாத்திரைப் பொழுதாவது இரண்டரை நாழிகையை எட்டுக் கூறிட்டு ஒவ்வொரு கூறும் ஒரு மாத்திரை யென்பர். சிலர் இருபத்தெட்டில் ஒரு கூறென்பர். எவ்வாறாயினும் நிதானமாய்க் காணக்கூடிய பொழுதாகும். தாளங்களுக்கு (அதாவது பாணி யெனப்படுவன) இம் மாத்திரை அளவுகளே பயன்படும். "கொட்டு மசையுந் தூக்கு மளவு மொட்டப் புணர்ப்பது பாணியாகும்." கொட்டு, அரைமாத்திரை; இது அமுக்குதலாம் தொழில் பெறும்; அசையாவது தாக்கியெழுதல், இது ஒரு மாத்திரை. தூக்கு இரண்டு மாத்திரை; இதன் தொழில் தாக்கித் தூக்குதல். அளவாவது தாக்கின வோசை; நேரே மூன்று மாத்திரை பெறுமளவும் வருதலென்பது முன்னரே காணப்பட்டது. இதன்றியும்,

தொண்ட ராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்!
விண்ட வர்புர மூன்றொரு மாத்திரைக்
கொண்ட வன்னுறை யுங்குட மூக்கிலே.

திருக்குடமூக்கு-திருக்குறுந்தொகை 7.

சாத்தி ரம்பல பேசுஞ்ச ழக்கர்காள்
கோத்திர முங்குல முங்கொண் டென்செய்வீர்?
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள ருளுமாற் பேரரே.

திருமாற் பேறு-திருக்குறுந்தொகை 3.

இந்தத் திருக்குடமூக்குத் திருக்குறுந்தொகை, திருமாற்பேறுத் திருக்குறுந்தொகைப் பாசுரங்களில் அப்பர் குறிக்கும் மாத்திரை நாடக வியலில் காணப்படும் அளவையே. முப்புர மெரிவதற்கும், அருள் பெறுவதற்கும், இயற்றமி ழிலக்கண மாத்திரையளவு உருவத்திற்கே பொருந்துமன்றித் தடத்த நிலையில் பெரும்பொருள்களுக்கு மிகவும் சிறிய காலவளவையாம். இப்பதிகங்களில் ஏனைய செய்யுட்களில் "பாட்டின்மாநடம்" அப்பர் மனதிலிருந்ததாய்க் காட்டுகின்றனவாதலால், இம்மாத்திரை நாடக விலக்கணத்தில் கொடுக்கும் அளவையே பெறுமென அநுமானிக்கலாகும்.

* பூதமோடு பேய்கள்பல பாடநட மாடிப்
பாதமுதல் பையரவு கொண்டணி பெறுத்திக்
கோதைய ரிடும்பலி கொளும்பர னிடம்பூ
மாதவி மணங்கமழும் வண்டிருவை யாறே.
சம்பந்தர்.

* "வாரமிரண்டும் வரிசையிற் பாட" சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை 136. வாரமென்பது கீத வுரு; சொல்லொழுக்கமும் இசையொழுக்கமு முடைய பாடல். இது தெய்வப்பாடல், பன்னு என்பர் புலவர்.

† இந்த வாரத்திற்கு இது முதனடை யாகும்.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி (போதுக்குறிப்புகள்)

911வது பக்கத் தொடர்ச்சி.

இம் மஹான் தன் கடைசி பிரபந்தமான திருவாய்மொழியை அந்தாதியாய்ப்பாடியுள்ளார். அது நூறு பதிகங்களால் ஆனது. ஒவ்வொரு பதிகத்தி னிறுதியிலும் தம் பெயர் முத்திரையால் அப்பதிகத்திற்கு முடி சூட்டி உள்ளார். அநேகமாய்க் "குருகூர்ச்சடகோபன்" என்பதே இம்முத்திரை. சிற்சிலவிடங்களில் "மாறன் சடகோபன்" என்றும் "காரி மாறன் குருகூர்ச் சடகோபன்" என்றும், "வழுதி வளநாட"னென்றும், கதாசித்கமாய் "நாட்கமழ் மகிழ் மாலைமார்பினன் மாறன் சடகோபன்" என்றும்முடித்துமுளார். எப்படி, மகிழ்மாலை மார்பனென்று இவர் பெயர்சம்பவித்தது? யார் இப்பேர் இட்டார்கள்? என இந்தக் கேள்விகள்உதிக்கின்றன. ஐதீகங்கொண்டே பதில்கூறல் வேண்டியிருக்கிறது. இவர் மகிமைதங்கிய வைணவ சமூஹங்களுக்கு நிர்வாஹகராய் வீற்றிருக்கும்பொழுதே தாம் இம்மாலையைச் சூட்டித் தம் ஸதஸை அலங்கரித்தாரென்றுஅவரே ஏற்றிருக்கும் முத்திரையால் தெளிவாகின்றது. ஆழ்வார்திருநகரியில் வீற்றிருந்துசெங்கோலாண்டு அடியார்களை உஜ்ஜீவிப்பிக்கக் கோயில்கொண்டிருக்கும் ஆதிபிரான் திருமாலையே ஸர்வஜனசம்மதமாய் இவரேற்றநுபவித்திருத்தல்வேண்டும். இதில் நம்போலியர்கள் ஒரு தொனி ஸூசகத்தை ஊகிக்கலாம். எல்லாப் புஷ்பங்களும் முகையிட்டுப் பூவாய்வளர்ந்ததும் பரிமளத்தை எத்திசையிலும் வீசி விளங்கி இரண்டொரு நாளில் தலை சாய்ந்து வாசனையற்றுச் சிதைந்தும் உருவழிந்தும் போகக் காண்கின்றோம். மகிடம்பூ இவ்வியல்புக்கு விலக்கு. வாடவாடப் பரிமளம் குன்றாமல் தன் நன்மணத்தை வெகுநாளைக்கு ஆதரித்து அகத்தில் அது பொதிந்துவைக்கும். நாடாமலே "சேயார்முகத்துச் சென்று தைக்காவிடினும்", உற்று உணர்வாருக்கு ஆப்த கேளிரைப்போல் காலக்கிரமங்கொண்டு தன் ஹிதத்தைச் சிறிதுமாற்றாமல்உறவாடும். இதுபோல் ஆழ்வார் பிரபந்தங்களும், உற்றுணர்வாருக்குத் தம் ஹிதம் குன்றாமல் நாளுக்குநாள் நற்போதனையை அளித்து ஞானத்தை ஊட்டும் என்ற கருத்தைக் கொண்டு, அன்பர்கள் இவ்வாழ்வாருக்கு மகிழ்மாலை தினம் சூட்டினார்போலும். இது நிற்க.

இவர் கடைசி பிரபந்தத்திற்குத் திருவாய்மொழி என்று எப்பொழுது எப்படிப் பெயர்வந்ததுஎன்பது இங்கு விசாரிக்கத் தக்கது. இது முதலில் "வாய்மொழி" என்றே பெயர் பெற்றுள்ளதா யிருந்ததென்று ஊஹிக்க இடமுண்டு. வாய்மொழி என்றால் முதுமொழிபோல் மனிதர் ஹிதத்தைத் தேடும் நல்வார்த்தை என்று அர்த்தம். வேதநூல்போல் ஒருவர் வாயில் நின்றும் மற்றொருவருக்குப் போதிக்கப்படும் சிறப்புவாய்ந்தது என்றபொருள் ஆயினுமாகும். இவர் காலத்திலேயே "திரு" என்ற அடைவு இவர் கிரந்தங்களுக்கே வாய்க்க ஏற்றமுடையதென்று இடைக்காடர் பாடியதாக ஒரு செய்யுள் உண்டு.

[மொன்றவ்
சேய்மொழியோ தாய்மொழியோ செப்பிரண்டு
வாய்மொழியை யாரும் மறையென்ப-வாய்மொழியோ
வாய்மொழிகள் சால உளவெனினும் அம்மொழியின்
சாய்மொழி யென்பேன் தகைந்து.

இதன்பொருள்:-சேய்மொழி (திருவாய்மொழி) தாய்மொழிக்கு(வேதம்) ஒப்பென்றும், இரண்டும் ஒன்றேயென்றும், இவ்வேற்றத்திற்கு அக்காலத்தில் நடையாடிய அநேக மொழிகளுக்கு இச்சிறப்பு வாய்க்குமென்றும்கூறுவார் சிலர்உளரேனும் யாமதை மறுத்து அவை எல்லாம் திருவாய்மொழி, குறள் இவைகளின் சாயை வாய்ந்திருக்கின்ற போலிகள் என்றே உரைப்பேன், என்கிறார். திருவள்ளுவர் இது சம்பந்தமாய் இயற்றினாரென்று ஒரு குறளும் நடமாடுகிறது.

" குறுமுனிவர் முத்தமிழும் என்குறளும் நங்கை
சிறுமுனிவர் ஒண்மொழியின் சேய் "

"நங்கை சிறுமுனிவன் என்றார்" உடைய நங்கைஎன்ற உத்தமி காரிக்குப்புதல்வராய் வாய்ந்தபுதல்வர் நம்மாழ்வார் என்று பொருள். இவ்வாழ்வாரது கால நிர்ணய ஆராய்ச்சியில் இக்குறள் விசாரிக்க உளதாதல் இப்பொழுது இதை விவரிக்க அவசியமில்லை. இங்குஇது முதல் கிரந்தமாக வேதத்துக்கொப்ப ஏற்றமடைந்திருந்ததென்று செப்பமாத்திரமுளது. இவர் பிரபந்தங்களை, திருக்கோவில்களில் எம்பெருமான் உத்ஸவங்களில் திருவுலாக்கொண்டு வெளிப் புறப்பாட்டில் எழுந்தருளியிருக்கும்போது ஏனைய ஆழ்வார்களின் பிரபந்தங்கள்போல் சாற்றுவதில்லை. எம்பெருமான் தன் திருவோலக்கத்தில் அமைந்துள்ள சமயத்தில் மாத்திரம் திருச்செவிகேட்கச் சாற்றுவார்கள். இதற்குக்காரணம் "நீ நின்று கேட்டருளாய்! யான் செய்யும் விண்ணப்பமே", என்று இவர் ஆதி கிரந்தத்தில்

பிரார்த்தித்ததை ஆதாரவுபற்றியதாயிருக்கும். "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்பிராப்பிய மனஸா ஸஹா" என்ற உபநிஷத்து, "வாக்கும் மனசும் எவ்வளவு சென்றாலும் அவன் கீர்த்திக்கு ஏற்ப எட்டிப்பிடிக்க முடியாமையால் திரும்புகின்றன" என்கிறதற்கு அறிகுறியாகப் பகவானைப் பின்தொடர்ந்தே வேத பாராயணம் நடைபெறும். புராணாதிகளும் மற்ற நல்லவார்த்தைகளும் பஜனைக்கூட்டங்களும் பகவானுக்கு முன்நின்று படிப்பது ஒழுங்கு என்று தம் சாஸ்திரங்களின் கொள்கைக்குஇணங்க முன்னரே சாற்றி வருகிறார்கள்.

பெரும்பாலும் இம்மேம்பாடு, இப் பிரபந்தங்களுக்கு தம்சுவயநலத்தால் வாய்ந்ததாகும். எம் மாட்சிமை தங்கியோரா லியற்றப்பட்டதானாலும், தத்துவத்தில் ஸர்வஜந சம்பந்தமாகத் தன்குண மேன்மையாலன்றி எந்நாளும் நடைபெறாது. ஆதியில் இவற்றை உத்தரித்த ஸ்ரீமன் நாதமுனி சீடர்களுக்கு அர்த்தத்துடன் போதிப்பித்தார். அவர் சிஷ்யருடைய சீடரின் சீடர் ஸ்ரீராமானுஜமுனி, இவருக்குக் குருமுகேன வந்த கட்டளையில் திருவாய்மொழிக்கு உரை எழுதுவது ஒன்று. இக்கடனை, தம்மைப்போன்று இப்பிரபந்தங்களில் ஆழ்ந்த பக்தியும் ருசிவாஸனையும் இயல்பாய்த் தோன்றி வளர்ந்துவந்த தன் மாமன்மகனும் பிரதம சீடனுமாகிய திருக்குருகைபிரான் என்றும், பின்னர்த் தம் பேருரையால் ஆறாயிரப்படிகாரர்என்ற பெயரும் புகழும் வாய்ந்தவரைக்கொண்டுதம்கட்டளையால் தீர்த்துவைத்தார். வைணவர்கள் தம் சித்தாந்தம், ஒருவழியாகச் சம்பிரதாய சுத்தமாய் வருவது என்று ஏற்றமும் வாசியும் கூறுவார்கள். இராமாநுஜமுனிமரபில் முதல்வந்த உரையாதலால், ஆறாயிரப்படிக்கு ஏற்றமுளதென் றெடுத்துக்கூறும் அவசியமில்லை. ஆகவே இதுதான் தகுதிவாய்ந்த வரலாற்றுமுறையில் அர்த்தத்தை விளக்கவுள்ளது. பின்னுளார் அநேகர் வியாக்கியானங்கள் செய்தாரெனினும் சுவய சம்பிரதாயத்திற்கு அவைகளின்விலக்கு நீக்குபோக்கு ஏற்பட இடமும் காரணமுமுண்டு. பூர்வாசாரியாரின் உரை எழுதப்படாமல் கர்ணிகாபரம்பரையாய் வந்தால் ஒவ்வொரு சீடரும் தன்கீழ்ச் சீடருக்கு உபதேசிக்கையில் தாம் கேட்டதில் சிறிதளவேனும் மாற்றிக் கூறியிரார் என்று எப்படி உறுதிகூறக் கூடும்? கொஞ்சம் கொஞ்சம் மாறுபாடுகள் இல்லாமல் முதலில் கற்பித்த அர்த்தங்களே பத்துவாய்ப்பாடு தாண்டின பிறகும் வந்திருக்குமென்று ஒருவராலும் துணிந்து கூறலாகாது. ஸ்ரீராமாநுஜரின் சீடருடைய சீடருக்குச் சீடரான நம்பிள்ளை தம் மாணாக்கரில் முதன்மையாய் விளங்கிய பெரியவாச்சான்பிள்ளை என்பவரைத் தாம் "வெளியிட்ட" அர்த்தத்தைப் பட்டோலை சாத்தி உலகுக்கு அளிக்க நியமித்தார். இப்படி ஏற்பட்ட வியாக்கியானம் இருபத்திநாலாயிரம் கிரந்தம். இது சிறப்புற்றது. பின்னுள்ளார் இதற்கு நாலு உதவிஉரை எழுதினார்களென்றால் அதின் அருமையை ஒருவாறு நாம் ஊஹிக்கலாம். இது இப்படி இருக்க, மேல்கண்ட நம் பிள்ளையின் சீடரில் மற்றொருவரான வடக்குத் திருவீதிபிள்ளை என்பார் தம் ஆசாரியரிடத்துப் பகலில் கேட்ட பாடத்தைத்தான் இரவில் பட்டோலை சாத்தினதாக முப்பத்தாறாயிரம் கிரந்தமாக ஸ்ரீபாஷ்யத்திற்குப்போலியாய் ஒரு வியாக்கியானம் இயற்றினார். இதுவே விஸ்தாரமுள்ளது. பிரசாரத்திலுமுள்ளது. இவ்விரண்டையும் ஸ்ரீ மணவாள மாமுனிகள் உகப்பாய்க் கூறியுளரேனும் அவர் தாம் கையாடிப் பிரசுரித்தது ஈடு என்று பெயர்பெற்ற முப்பத்தாறாயிரப்படியே. இவ்விரண்டுரைகளுக்கும் இவர் உபதேசரத்னமாலை என்றநூலில் சிறப்புப்பாயிரம் தாமே கூறியிருந்தாலும் 24-ஆயிரப்படிக்கே இவர் ஏற்றம் கூறியிருப்பதாக நம்சிற்றறிவுக்குப்புலப்படுகிறது. அப்பாயிரங்களை இங்கே எடுத்து வரைவோம். முதல், 24 ஆயிரப்படியைப்பற்றி,

"நம்பிள்ளை தம் நல்லருளால் ஏவியிடப் பின்பெரியவாச்சான்பிள்ளை அதினால் இன்பா வரு பத்தி மாறன் மறை பொருளைச் சொன்னது இருபத்திநாலாயிரம்" — இதினால் திருவாய்மொழிக்கு உரைகூற நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளையையே நியமித்தார் என்று நன்கறியலாம். மற்றச் சிறப்புப்பாயிரத்தையும் கூறுவோம். 36-ஆயிரப்படியை இயற்றிய ஆசிரியர்வடக்குத் திருவீதிபிள்ளை. இவர் இயற்றியதற்கு "நம்பிள்ளை ஈடு" என்று பெயர்வர என்ன காரணம்? "[illegible] தெள்ளிய [illegible] செப்பு நெறிதன்னை, வள்ளல் வடக்குத் திருவீதிபிள்ளை யிந்த நாடறிய மாறன் மறைபொருளை நன்குரைத்தது ஈடு முப்பத்திஆறாயிரம்." — நம்பிள்ளை செப்பிய நெறிதன்னைத் திருவீதிபிள்ளை நன்குரைத்தாரென்று ஆகிறது. இவருக்கும் உரையியற்ற நம்பிள்ளையின் அநுஞ்ஞை உண்டென்பர் சிலர். நம்பிள்ளை என்பார், இரண்டு சீடர்களை ஒரே நூலுக்கு உரை யியற்றக் கட்டளை இட்டிருப்பாரென்பது அசம்பாவிதம். அங்ஙனம் நியமித்திருந்தால் ஒன்றை மற்றொன்றைவிட நன்கு மதித்திருத்தல் வேண்டும், அல்லது இரண்டும் கிராஹ்யமென்று கூறியிருத்தல் வேண்டும்; எதுக்கும் சாக்ஷியம் போதாது. காலக்ஷேபத்திற்கு, அதாவது காலத்தை நல்லவழியில் செலவிடுதலுக்கு, 36-ஆயிரப்படி இதிஹாஸங்களும் கதைகளும் விசித்திர உல்லேகங்களும் கலந்து ரசமாயுள்ளது. அநேகர் இதுபற்றியேஇதைச்சிறப்பாகக்கொள்வார்கள். எமக்கு ஆறாயிரப்படியிலேயே மிதமிஞ்சிய ஆதாரமும் அன்பும் உளது. அதற்குக் காரணம், அவ்வுரையின் ஆர்நவமே. இவர் நேரே உடையவரிடத்தில் பாடம் கேட்டவர்; உடையவர் முன்னுளார் உரைத்த அர்த்தங்களும் கேட்டுளார். ராமாநுஜமுனியும் தாம் கேட்ட அர்த்தங்களைக்கூறும்போது தாம், முன் அபிப்பிராயத்தில் கலவாதஇடத்தில் முன்உரைகாரருக்கும் தமக்குமுள்ள அபிப்பிராய பேதத்தை எடுத்துச் சொல்லியுளார் என்றும் இவ்வாறாயிரப்படி உரையால்நமக்குத் தெரியவருகிறது. இதற்கு இரண்டொரு உதாரணங்கள்எடுத்துக்காட்டாமற் போனால் எம்மைச் "சித்தாந்தி" என்றுகுறைகூற ஏற்படும். என்றாலும் அவ்வவ்விடத்தில் இதைக் கூறுவது உசிதமாகையால் அவற்றை இங்குக் கூறி வாசிப்பவர்க்கு இடர்ப்பாடு இப்போது செய்வதைவிட்டு ஒழிந்தோம்.

சிற்சில விடங்களில் தம்மையும் திருமாலையும் நாயக நாயகி பாவமாய் அமைத்துக்கொண்டு நம்மாழ்வார் திருவாய்மொழியில் பாடியிருக்கிறார். அவர் அன்பர்கள் நற்றாய் ஸ்தானத்திலும், செவிலித்தாய் தோழி முதலினோர் முறையிலும் நின்று அவாது, அன்பு ஆர்த்தி மனோவியாதி மாமை பசப்பு தளர்ச்சி இவற்றைப்பற்றித் தெரிவிப்பதாகப் பாசுரங்கள் இயற்றியிருக்கிறார் ஸ்வாபதேசத்தில்ஆழ்வாரதுமனோநிலையை அன்பர் குறிப்பதே இப்படி. வாய்ந்த பாசுரங்களுக்குக் கருத்து. தூதுபிரேஷணமும் இப்பெருமைபொருந்திய பிரபந்தத்தில் நாலுமுறை காணக்கிடக்கிறது. தூது ஏற்பவன் திருமாலே. திருத்தாயார் பாசுரமாயும், நேரில் செய்யும் விண்ணப்பரூபமாய் ஏற்படும் சந்தர்ப்பங்களும் உள. இது நிற்க, சமுத்திரக் கரைக்கு அருகில் வசித்துவந்தன ராதலின் கானல்களையும் அவைகளில் பாயும் உப்பங்கழிகளில் நீர் நிறைதல் வற்றல் முதலான உருக்காட்டி மறையும் காட்சிகளையும், அந்நிலத்திற்குரிய பறவைகளின் கூட்டம் நடை இவைகளையும், நன்கு அறிந்தவர் இம்மஹான். செந்நெல்லும் கரும்பும் ஓங்கிவளர் நன்னீர்வாய்ந்த கழனிகளிலும் மதுமொய்க்கும் சோலைகளிலும் அளிகொள் வண்ணப்பூங் கொத்துகள் முதல்முதல் மலர்ந்து அலங்கரிக்கும் வனங்களிலும் இவர் உலாவித் திரிந்தாரென்று கூற இடமுண்டு. இவர் வரையறுத்துக்கூறிய நுட்ப விஷயங்களை ஆராயுமிடத்து இவர் பற்பலவிஷயங்களில் பழகினவர்போல் காண்பரேனும் அவற்றை மனக்கண்ணால் கண்டவரே தவிரப் புறக்கண்ணால் கண்டவர் அல்லர்!

"அடிசேர் முடியினராகி அரசர்கள் தாம்தொழ
இடிசேர் முரசங்கள் முற்றத்து இயம்பஇருந்தவர்"

என்கிற பாசுரத்தை வாசிப்பவர், இவர் தாம் கண்டதையே (Imperial Durbar) வர்ணிக்கிறாரென்று பிரமிப்பார்கள். விலைமாதர் உபசரிக்கும் போக்கும், அம்மென்குழலார்கள் இன்பக்கலவியை விழைகின்றவருக்கு அமுதுபோல் ஊட்டும் திறமும் தான் நேரே கண்டுணர்ந்தவர்போல் விவரித்து வேறோரிடத்தில் இகழுகிறார். திருவாய்மொழியைப்படிக்கப்படிக்கஇம்மகான் அகக்கண்ணுக்குப் புலப்படாத காட்சியுமுண்டோவென விஸ்மயம் தோற்றுகிறது.

இவரது திருவாய்மொழியைப்பற்றி விசாரிக்கவேண்டிய மற்றொரு அம்சம் நிற்கின்றது. அதாவது இவர் இப்பிரபந்தம் இயற்றும்முன்பே ஆயிரம் செய்யுளாகத் தம் நூலை இயற்றுவதாகச் சங்கல்பித்துக் கொண்டவரா, அல்லது அது தற்செயலாக ஆயிரத்துக்கு ஏறியதா, என்பதாம். ஆராயும்போது, முதலில் ஒரு திடவுறுதி யின்றி ஆரம்பித்துப் பிறகு போகப் போக ஆயிரமாக அமைக்கக் கருதினாரென்று ஏற்படுகிறது. முதல்பத்து பதிகத்தின் இறுதியில்,

"பரனடிமேல் குருகூர்ச் சடகோபன் சொல்
நிரனிறை யாயிரத்து இவைபத்தும் வீடே"

—(அதாவது இப் பத்தைக் கற்பவர் ஆநந்தரூபமான மோக்ஷத்தைப் பெறுவார்கள் என்றபடி)—என்கிற முத்திரை காண்கின்றமையால், இவர் ஆயிரம் பாக்கள் இயற்றவே நியமித்துக்கொண்டாரென்று அநுமானிக்கலாம். இது தத்துவமன்று. "நிறை" என்றால் சொற்களின் அழகு, சந்தர்ப்பங்களின் அழகு, பொருளின் சீர்மை, இசையின் அழகு இவைகளெல்லாம் "நிறை" நிறைந்ததென்று அர்த்தம் "ஆயிரத்து இவை பத்தும் வீடே" என்பதற்கு உரைகாரர் "பரனுக்கு (எம்பெருமானுக்கு) அபரியந்தமாக (முடிவுபெறாதனவாக) வேணுமென்று தம் இஷ்டாபத்தியைக்கூறுகிறா"ரென்றுபொருள்கொண்டிருக்கிறார். இப்படி அந்வயிக்கக் கூடுமோவெனில் இப்பிரபந்தத்தில் பிறகு அநேக இடங்களில் இவர் தாமே இடும் முத்திரையில் பக்தர்களுக்கும் பாவிசைக் காரருக்கும் (bards) பாடும்படி கிரந்தம் உலக உபகாரமாகக் கூறியுளோமென்று உரைக்கிறார். இவர் மனம் எம்பெருமான் விஷயத்தில் தாழ்ந்து வீழ்ந்துகிடக்க, விஷயசுபாவத்தால் ஆற்றொழுக்கு இழுத்துக்கொண்டு போவதுபோல் இவரை மேன்மேலும் புகழ்பாடுவிக்குமே யல்லாது இத்தனையென்று சங்கியை ஏற்படுத்திக்கொண்டு அவ்வளவில் நிற்க இவர்மனம் சம்மதிக்குமா? இப்படிக்கில்லாமல் அளவு ஏற்படுத்தி நிர்ணயத்தோடு பாடியிருந்தால்-4-ம் பத்து 9-ம் பதிகத்தினிறுதியில் "ஐங்கருவி கண்ட வின்பம், ஒண் தொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்டசதிர் கண்டொழிந்தேன்" என்றும், "உன் திருவடி அடைந்தே" னென்றும், அடுத்த பாசுரத்தில் "திருவடி சேர்வது கருதி இப்பத்தும் உரைத்தே" னென்றும், கிரந்தத்தை முடிக்கிறவர்போல் பேசியிருக்கக்கூடுமோ? 6-ம்பத்து இறுதியிலும், தாம் திருவேங்கடமுடையானிடத்தில் ஆர்த்தி சரணாகதி செய்து வீடுபெற உத்யோகித்தார். ஆனால் இவர் முயற்சி பீடுபெறவில்லை. இவர் "முடிப்பான் சொன்ன வாயிரத்து இவை பத்தும் பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவரே" என்று அறுதியிட்டிருப்பதால் கிரந்தத்தை முடிக்க எதிர்பார்த்தார் என்றும் புலப்படுகிறது அடுத்த ஏழாம்பத்தின் முதலிலோ, பகவானைநோக்கி "நான் என்னை முடித்துக் கொள்ள நிச்சயித்தால் நீ,

"உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி
என்னைஉன் பாதபங்கயம்
நண்ணிலா வகையே நலிவான் இன்னம்
எண்ணுகின்றாய்"

என்று நோவுபடுகின்றார். பகவான் ஏன் இவரது வேண்டுகோளுக்கு இணங்கவில்லை என்றால், இவர் திருவுடம்பில் அவனுக்கு எற்பட்டிருந்தஅசாதாரண மோஹமும், இவரைக்கொண்டு திருவாய்மொழியை முடித்துத் தலைகட்டவேண்டுமென்றசங்கல்பமும்மேற்கொண்டுஎழுந்ததேகாரணமாம். இவர்சுத்தமானதமிழ் கொண்டே, கடினமும் சூக்ஷ்மமுமான வேதாந்த அர்த்தங்களை ஒரு வடமொழி கலவாதே நிரூபிக்கவல்லவர் என்பதை ஆங்காங்குத் திருவாய்மொழி ஆராய்ச்சியில் குறிப்போம். இவரது கவியின் தீஞ்சுவை வால்மீகத்துக்கும் இங்கிலீஷில் ஷேக்ஸ்பியருடைய கவிதைக்கும் ஒப்புள்ளது. உலகத்தின் கவிகளில் முதல்தரமாய்ச் சிரேஷ்டரென்று எல்லாப் பாஷைகளிலும் பொறுக்கி எடுக்கப்புகின் இவரும் அக்கூட்டத்தில் முதல் வரிசையிலேயே எண்ணக்கூடியவரா யிருப்பார். இவர் பெருமை அசாதாரணமாயுள்ளது. என்னென்றால், தன் மனதில் நிகழும் அச்சம் தேர்ச்சி ஆசை வெறுப்பு முதலியவற்றை நிகழ்வதுபோலே மிகைபடாமலும் குறைக்காமலும் தம் வாசகத்தால் தாம் அனுபவித்தபடியே சொல்லவல்லவர் இவர். இடாலியா தேசத்து டாண்டே (Dante) என்கிற கவியைப்போல ஏதோ சிற்சிலரே தங்கள் அருமையான மனத்திட்டத்தை ஏனையவருக்குஎய்தக்கூடாத உன்னதமான விசித்திர கற்பனையிலமைத்து மாண்புபெறக் கூறவல்லவர். ஆங்கிலத்தில் மில்டன் (Milton) என்கிற கவியும் சற்று ஏறக்குறைய இவ்வகைக் கவி என்று கூறக்கூடும். நம்மாழ்வாரும் இவர்கள்போல் விசித்திர கற்பனையைத் தம் மன எழுச்சியால் (Flight of imagination) உத்தரித்துக் கூறத் தகுந்தவர். எல்லாரும் அறியக்கூடிய சொற்களால் இனிமையும் ரசமும்வாய்ந்த படங்களை நயமாயும் ஸஹஜமாயும் அமைக்கும் சக்தி இந்தப்பிரபந்தத்திற்கு மற்றொரு அசாதாரணமான ஏற்றம். இதை 2-ம்பத்து முதல் பதிகத்தில் காணலாம். இவ்விடத்தில் எடுத்துக்கூறினால் கிரந்தம் விரியும். திருவாய்மொழி ஆராய்ச்சியில் பின்னர் வரும் வியாஸத்தில் உரித்தானவிடத்தில் எடுத்துக் காட்டுவோம்.

தமிழ்ப் பாடம் 99.

[அஷ்ட பிரபந்தம்.]

[909-வது பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கக் கலம்பகம்.

காலா யிரமுடி யாயிர மாயிரங் கைபரப்பி
மேலா யிரந்தலை நாகங் கவிப்பவிண் பூத்தகஞ்சம்
போலா யிரங்கண் வளரும் பிரான்பொன் னரங்க [னென்றே
மாலா யிரங்கவல் லார்க்கெய்த லாந்திரு வைகுந்தமே.

பதப்பிரிவு:—கால் ஆயிரம் முடி ஆயிரம் ஆயிரம் கை பரப்பி மேல் ஆயிரம் தலை நாகம் கவிப்ப விண் பூத்த கஞ்சம் போல் ஆயிரம் கண்வளரும் பிரான் பொன் அரங்கன் என்றுஏ மால் ஆய் இரங்க வல்லார்க்கு எய்தல் ஆம் திரு வைகுந்தம்ஏ.

பதவுரை.

கால் - கால்கள், ஆயிரம் - ஆயிரமும், முடி - சிரங்கள், ஆயிரம் - ஆயிரமும், ஆயிரம் - ஆயிரம், கை- கைகளும், பரப்பி - பரப்பிக்கொண்டு; மேல் - மேலே, ஆயிரம் - ஆயிரம், தலை-தலைகளை உடைய, நாகம் - ஆதிசேஷன், கவிப்ப - கவிந்திருக்க; விண் - ஆகாயத்தில், பூத்த - மலர்ந்த, கஞ்சம்போல் - தாமரை மலர்களைப்போல், ஆயிரம் - ஆயிரம், கண்வளரும் - கண்கள் துயிலப்பெற்ற, பிரான் - பரம்பொருள் தான், பொன் - அழகிய, அரங்கன் - திருவரங்கத்தில் எழுந்தருளி இருப்பவன், என்றே-என்று நிச்சயமாக உணர்ந்து, மால் ஆய் - பக்தி உடையவர்களாகி, இரங்க - மனம் உருக, வல்லார்க்கு - கூடியவர்களுக்கு, திருவைகுந்தம் - சிறந்த வைகுண்டத்தை, எய்தல் ஆம் - எளிதில் அடையக்கூடும்.

கருத்து:—ஆயிரம் என்பது இங்கு அளவில்லாமையைக் குறித்து நிற்கின்றது. கணக்கிலாக் கால்களும், சிரங்களும்,கைகளும்,கண்களும்உடையராய்எம்பெருமான் எங்கும் வியாபித்து எல்லாமறியவும்,எல்லாஞ் செய்யவும் வல்லவர் என்னும்இப்பாசுரம், "ஸஹஸ்ர சிருஷா புருஷ : ஸஹஸ்ராக்ஷ ஸஹஸ்ரபாத்" என்ற புருஷஸூக்தத்தின் முதலையே தழுவிப் பாடப்பெற்றிருக்கின்றது. அந்தப் பரம்பொருள்தான் இந்தத் திருவரங்கநாதன் என்ற பக்தியோடு மனமுருகித் தொழுபவர் வைகுந்தம் பெறுவது திண்ணமெனக் கவி சாற்றுகின்றார்.

குறிப்பு:—திருமாலினது கண்கள் விண் பூத்த கஞ்சம்போல இருந்தனவென்பது இல்பொருள் உவமை அணி. ஆகாயத்தில் தாமரை ஒருபோதும் பூக்காது. ஆதலின், ஆகாயத்தில் பூத்த தாமரை என்பது இல்லாத பொருளாம். ஆனால், ஆகாயத்தில் தாமரை பூக்குமாயின் எவ்வாறு தோன்றுமோ, அவ்வாறு தோன்றியன, நீலநிறமான திருமாலினது தாமரை போன்ற கண்கள் என்று கொள்ளவேண்டும் ஆகையால் இது இல்பொருள் உவமை ஆகின்றது.இதுவே போல், இக்கலம்பகத்தின் முதற்பாட்டில், "கரியமால் வரை முளரிக்காடு ஈன்று கிடந்தாங்கு" என்று வந்திருப்பதும் இல்பொருள் உவமையே. மலையினும் தாமரை பூத்தலென்பது இல்லை.

என்று+ஏ=என்றே எனவும், வல்லார்க்கு+ எய்தலாம்=வல்லார்க்கெய்தலாம் எனவும், நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் கெட்டுப்போய்விட, அது நின்றிருந்த மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறிப் புணர்ந்தது.

இச்செய்யுள், திருவரங்கத்தந்தாதி, திருவரங்க மாலைச் செய்யுள்கள்போல் கட்டளைக்கலித்துறை. மெய்யெழுத்துக்களை விட்டுவிட்டு எண்ணினால் ஒவ்வோரடியிலும் பதினாறு எழுத்துக்கள் இருக்கும்.

வைகலந்த மூவிலைவே லீசற்கும் வாசவற்கும்
வாசப் பூமேல்
மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கும் மேலாவீற்
றிருப்பர் மாதோ
பைகலந்த பாம்பணைமேற் றிருவரங்கப் பெருநகருட்
பள்ளி கொள்ளும்
கைகலந்த நேமியான் றிருநாமத் தொருநாமங்
கற்றார் தாமே. 3

பதப்பிரிவு:—வை கலந்த மூ இலை வேல் ஈசற்கும் வாசவற்கும் வாசம் பூமேல் மெய் கலந்த நால் வேதம் விரிஞ்சனுக்கும் மேல் ஆ வீற்றிருப்பர் மாதோ பை கலந்த பாம்பு அணைமேல் திரு அரங்கம் பெரு நகர் உள் பள்ளி கொள்ளும் கை கலந்த நேமியான் திரு நாமத்து ஒரு நாமம் கற்றார் தாமே.

அன்வயம்:—திருவரங்கப் பெருநகருள் பைகலந்த பாம்பணைமேல் பள்ளிகொள்ளும் கைகலந்த நேமியான் திருநாமத்து ஒருநாமம் கற்றார்தாம்—வைகலந்த மூ இலைவேல் ஈசனுக்கும் வாசவனுக்கும் வாசம் பூ மேல் மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கும் மேல் ஆய் வீற்றிருப்பர்.

பதவுரை

திரு - அழகிய, அரங்கம் - அரங்கமென்னும், பெரு - பெரிய, நகர்உள் - நகரத்தினுள்,பாம்பு - ஆதிசேஷனாகிய, அணைமேல் - படுக்கையின்மேல், பள்ளி கொள்ளும் - படுத்திருக்கும், கை - கையில், கலந்த - பொருந்திய, நேமியான் - சக்ராயுதத்தை உடைய திருமாலினது,திரு - மேன்மை பொருந்திய, நாமத்து- (ஆயிரம்) நாமங்களில், ஒரு - ஒரு, நாமம் - பேரை, கற்றார் - அதற்குரிய மகிமையை உணர்ந்து உரைக்கக் கற்றவர்—

வை - கூர்மை, கலந்த - சேர்ந்த,மூ -மூன்று, இலை - இலைகளையுடைய, வேல் - சூலத்தை ஏந்திய, ஈசற்கும்- பரமசிவனுக்கும், வாசவற்கும் - இந்திரனுக்கும், வாசம் - வாசனை பொருந்திய, பூமேல் - தாமரை மலரின்மேல் இருக்கும், நால் - நான்கு, வேதம் - வேதங்களைத்தந்த, விரிஞ்சனுக்கும் - பிரம்மனுக்கும், மேல் ஆ - மேலான ஸ்தானத்தில், வீற்றிருப்பர் - பெருமையோடு அமர்ந்திருப்பார். (மாதோ-அசை)

கொண்டல்கா ளும்மைக் குறித்தே தொழுகின்றே
னண்டர்கா ணவரங்கத் தம்மானைக்—கண்டு [லிப்
மனத்துளவத் தைப்படுமென் மையலெல்லாஞ் சொல்
புனத்துளவத் தைக்கொணரீர் போய். 4

பதப்பிரிவு:—கொண்டல்காள் உம்மை குறித்துஏ தொழுகின்றேன் அண்டர் காணுஅரங்கத்துஅம்மானை கண்டு மனத்துள் அவத்தை படும் என் மையல் எல்லாம் சொல்லி புனம் துளவத்தை கொணரீர் போய்.

பதவுரை

கொண்டல்காள் - மேகங்களே, உம்மை - உங்களை, குறித்து ஏ - நோக்கியே, தொழுகின்றேன் - வணங்குகின்றேன்,

அண்டர் - தேவர்களாலும், காணு - காண இயலாத, அரங்கத்து - திரு அரங்கத்தில் உள்ள, அம்மானை - என் தலைவனை, போய் - நீங்கள்போய், கண்டு - பார்த்து,

மனத்துள் - மனத்துள், அவத்தைப்படும் - வருந்துகின்ற, என் - எனது, மையல் - ஆசைநோய், எல்லாம் - எல்லாம், சொல்லி - அவனிடம் சொல்லி, புனம் - வனத்தில் வளர்கின்ற, துளவத்தை - துளசியை, கொணரீர் - அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு வாருங்கள்.

கருத்து:—கவி இங்குத் தன்னை ஒருபெண்ணாகவும், திருவரங்கனைத் தன்காதலனாகவும் பாவித்து, அவனைப் பிரிந்திருப்பதால் தான் படுகின்றதுன்பத்தை அவனிடம் சொல்லி அவனைத் தன்பால் அடைவிக்குமாறு மேகத்தைத் தொழுது தூதுவிடுவதாகக்கூறுகின்றார்.

விரிவுரை:—பக்தியால் பரவசமாகிய கவிஞர் இவ்விதம் அகப்பொருள்துறைகளில் தம்மை நயாகியாகவும் கடவுளை நாயகனாகவும் அமைத்துப் பாடுவது மரபு என்று முன்னரே காட்டியிருக்கின்றோம். சிற்றின்ப வாசகங்கள்போல் தோன்றினாலும் இவைகளில் பக்திபரமாய் உள்ளுறை அர்த்தமும் அடங்கியிருக்கும். பிள்ளைபெருமாள் ஐயங்கார், பக்தர்களை நோக்கி "திருமால் வந்தென்னை ஆட்கொள்ளுமாறு செய்யுங்கள்" என்று வேண்டிக்கொள்ளும் குறிப்பினது இச்செய்யுள்.

தேவர்களாலும் காண்இயலாத அம்மானை இம்மேகங்கள் எவ்வாறு காணக்கூடுமென்று எண்ணினார் இவர்? நிறத்தாலும், உலகத்தைக் காக்கின்ற தொழிலாலும் மேகங்கள் திருமாலை ஒக்கும். மேகம் தன்னிலிருந்து நீரை எடுத்துக்கொடுக்கின்றது என்றாகாமல் தன்னையே கொடுத்துக்காப்பதால், "தன்னையே தமர்க்கு நல்கும்" தனிப்பெருங் கருணைவள்ளலை அவை முற்றிலும் ஒத்திருக்கின்றன. ஆதலின், திருமாலும் மேகங்களும் ஓரே இனத்தைச் சேர்ந்தவர். எனவே, தேவருக்குத் தென்படாத எம்பெருமான் தன்னினத்தைச் சேர்ந்த மேகத்திற்குத் தென்படலாம் என்று கருதினார் போலும் கவி.

குறிப்பு:—நளவெண்பா, திருவேங்கடமாலை முதலிய நூல்களில் வந்துள செய்யுள்களைப்போல், இச்செய்யுளும் நேரிசை வெண்பாவாகும். மனத்துளவத்தை, புனத்துளவத்தை எனப் பின்னிரண்டடிகளில் வந்திருப்பன (திருவேங்கடமாலையில்போல்) வேறுவேறு பிரிந்து பொருள்படுமாகையால் திரிபு என்னும் சொல்லணி. முதலெழுத்து மாத்திரம் வேறாக இருக்க மற்ற எழுத்துக்கள் ஒன்றாகஇருந்தால் திரிபு—முதலெழுத்தும் (திருவரங்கத் தந்தாயிற்போல்) ஒன்றாக இருந்தால், யமகம்.

காயிலை தின்றுங் கானி லுறைந்துங் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்துந் திரிவீர்கா
டாயினு மன்பன் பூமக ணன்பன் றடநாகப்
பாயன் முகுந்தன் கோயி லரங்கம் பணிவீரே. 5.

பதப்பிரிவு:—காய் இலை தின்றும் கானில் உறைந்தும் கதி தேடி தீ இடை நின்றும் பூ வலம் வந்தும் திரிவீர்காள் தாயினும் அன்பன் பூமகள் நண்பன் தட நாகம் பாயல் முகுந்தன் கோயில் அரங்கம் பணிவீர் ஏ.

பதவுரை

காய் - காயையும், இலை - இலையையும், தின்றும் - தின்றும்; கானில் - காட்டில், உறைந்தும் - வசித்தும்; தீ - நெருப்பின், இடை - மத்தியில், நின்றும் - நின்றும்; பூ - பூமியை, வலம்வந்தும் - சுற்றிவந்தும்; கதி - நற்கதி, தேடி - தேடி, திரிவீர்காள் — அலைகின்றவர்களே, (நீங்கள் இவ்விதம் தவம் யோகம் முதலியவைகளால் உங்களை ஒன்றும் வருத்திக்கொள்ள வேண்டா)

தாயினும் - தாயைக்காட்டிலும், அன்பன் - அன்புடையவனும், பூமகள் - இலக்குமி பூமிதேவி என்னும் இருவருக்கும் நாயகனும், தட - பெரிய, நாகம் - ஆதிசேஷனை, பாயல் - படுக்கையாக உடையவனும் ஆகிய, முகுந்தன் - எம்பெருமான் தங்கியுள்ள, கோயில் - கோயிலாகிய, அரங்கம் - திருவரங்கத்தை, பணிவீர் - வணங்குங்கள்! (அதுவே போதும். நற்கதி அடைவீர்)

குறிப்பு:—பூ மகள், என்பதில் முதலிலுள்ள பூ என்னும் சொல்லை மலர் என்ற பொருளுடைய தமிழ்மொழியாகக் கொண்டால், அத்தொடர் தாமரையைத் தவிசாகவுடைய இலக்குமியைக் குறிக்கும். அவ்வாறன்றிப் பூ என்பதைப் பூமிஎன்ற பொருளுடைய வடமொழியாகக் கொண்டால், அத்தொடர் பூமிதேவியைக் குறிக்கும். திருமகள் நிலமகள் ஆகிய இருவருக்கும்திருவரங்கன் நாயகன் என்பதை, 'பூமகள்நண்பன்' என்ற ஓரேவாக்கியத்தால் இருபொருள் படுமாறு உரைத்தது, இரட்டுற மொழிதல் என்னும் உத்தி.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

மானத சாத்திரம்

PSYCHOLOGY

நரம்புகள்.

916வது பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு நரம்புநாரிலும் ஓடும் நரம்புக்கிளர்ச்சி ஒரு தன்மையினதா? கண்ணிலிருந்து ஓடும் நரம்பு காதிலிருந்துஓடும் நரம்பினும் வேறான இயல்பினதோ? கண்ணினின்றோடுவது ஒளியைப் பற்றியதோ? காதினின்று ஓடுவது ஒலியைப் பற்றியதோ? சிலர், 'ஆம்' என்பர். ஆனால் இதுவரை நாம் அறிந்தவற்றை வைத்து மேல்ஆராயும்போது ஒரு நரம்பிற்கும் மற்றொன்றிற்கும் இயற்கையில் வேற்றுமைஇல்லை என்றே விளங்குகிறது. மின்னாற்றல் (Electricity) பல கம்பிகள் வழியாக ஓடுகின்றது; ஒரு கம்பியில் ஓடுவதற்கும் மற்றொன்றில் ஓடுவதற்கும் வேற்றுமை ஒன்றும்இல்லை. ஆனால் ஒரு கம்பியில் ஓடுவதோ விளக்கெரிக்கிறது; மற்றொன்றில் ஓடுவதோ விசிறுகிறது. இவ்வேற்றுமை இயற்கை வேற்றுமையன்று. ஒவ்வொரு கம்பியும் எங்கெங்கே போய் முடிந்ததோ அந்த அந்த முடிவிடத்தைப்பொறுத்ததாகும் இவ்வேற்றுமை. விளக்கில் போய் முடிந்தது விளக்கெரிக்கிறது. விசிறியில்போய் முடிந்தது விசிறுகிறது. அதேபோல நரம்புக்கிளர்ச்சிகளும் தம்மில் ஒரு வேற்றுமையுமின்றி முடிவிடத்தால் வேற்றுமை யுறுகின்றன. கண்ணில்போய்முடிவது ஒளியை உணர்கிறது. காதில் முடியும் நரம்பு வெளிப்புறத்து ஒலியைக் கேட்டால்தான் ஒலியை யுணரும் என்பதில்லை. அவ்வாறே கண்நரம்பும் வெளிஒளியைக் கண்டால்தான் ஒளியை யறியும் என்பதில்லை. கண்ணோடு சேர்ந்த நரம்பில் ஒரு கிளர்ச்சியை யுண்டாக்குவோமானால் ஒளி இல்லாத இடத்திலும் ஒளியைக் காண்போம். கண்நரம்பில் ஒரு மின்னோட்டம் (Electric-current) தாக்கினால் ஒளியில்லாதபோதும் ஒளியைக் காண்கிறோம். அவ்வாறேமற்றைய புலன்களும் ஆகும். ஏதாவதொரு வகையில் நரம்பைத்தாக்கி ஒரு கிளர்ச்சியை உண்டாக்குதல் வேண்டும். அப்போது அந்நரம்பு எவ்வுறுப்பில் முடிகின்றதோ அதற்கேற்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம். கண்நரம்பைக் கொண்டுபோய்க் காதில்விட்டு, காது நரம்பைக் கொண்டுபோய்க் கண்ணில் விட்டால், இடியைக் காண்போம்; மின்னலைக் கேட்போம். கண்ணின் நரம்பை வெட்டி எடுத்து, காதுநரம்போடு இணைத்து விடலாம்; ஆறிய பின்னர் இவ்வாறு காது நரம்போடு சேர்க்கப்பட்ட கண்ணரம்பு ஒலியைக் கேட்கிறதேயன்றி, முன் கண்ணோடு இணைந்திருந்தபோது ஒளியைக் கண்டதுபோலக் காண்பதில்லை.

நரம்புகள் தொழிலுறுவதனாலே உயிர்ப்பொருளானது (Livng substance) எரிக்கப்படுகிறது. நாம்உணவு உண்டு உழைப்பதுபோல அவையும் உணவுஉண்டு உழைக்கின்றன. உண்பதென்றால் என்ன? உயிர்க்காற்றை உட்கொண்டு கரிக்காற்றை வெளித்தள்ளுவதே யாகும். கரிக்காற்று வெளியாவதிலிருந்து இதனை யறியலாகும். "டஷீரோ" என்பவர், ஓய்ந்திருக்கும் நரம்பு நார்கள் கரிக்காற்றை வெளியிடுகின்றனஎனச் செய்காட்சியால் (Experiment) கண்டறிந்தார். தூண்டப்பட்ட நரம்புகளில் கிளர்ச்சி ஓடும்போது இந்நரம்புநார்களை முன்னையினும் இரண்டத்தனைக் கரிக்காற்றை வெளியிடுவதாகக் கண்டறிந்தார். தாக்குண்ணும் இடத்தருகேயுள்ள நரம்புகள் விரைந்து கரிக்காற்றை வெளியிடுகின்றன. இயங்குவாய்க்கு அருகேயுள்ளவையோ குறைவாகவே கரிக்காற்றை வெளியிடுகின்றன. நரம்புக்கிளர்ச்சி இயற்கையாகப் போகும்வழியில் போகப் போக நரம்பின் உழைப்பானது குறைபடுகின்றது என்பதாயிற்று. கிளர்ச்சியின் இயற்கை ஓட்டத்திற்குப் பொருந்தியதொரு தன்மை நரம்பின் இயற்கையமைப்பிலேயே காணக் கிடக்கின்றது. இவ்வாறு நரப்பின் உழைப்பு இடத்திற்குஇடம் மாறுபடுவதால், நரம்புக்கிளர்ச்சியைத் தடையின்றிக் கம்பியிலோடும் மின்னாற்றல் முதலியவற்றோடு ஒப்பிடுதலாகாது. நரம்பின் இயற்கை அமைப்பிலேயே இக்கிளர்ச்சியால் மாறுதல் உண்டாகிறது (Chemical change). மற்றைய பொருள்களின் விசையினும் இந்நரம்புக்கிளர்ச்சியின் அலையின் விசை குறைதலால் இக்கிளர்ச்சி மற்றையது போன்றதன்று என்பதாயிற்று. சில நரம்புகளைச் சுற்றிக் கொழுப்பு மூடியிருக்கிறது; இவை நிணநரம்பு. சில நரம்புகளைச் சுற்றிக் கொழுப்பிருக்கக் காணோம்; அவை நிணமிலா நரம்பு. நிணமிலா நரம்பில் (Un-myelinated Nerve) ஒரு நொடியில், ஒரு அங்குலத்தில் இருந்து 18 முழம் வரை நரம்புக்கிளர்ச்சி விரைந்து ஓடுகிறது. தவளையில் காணப்படும் நிணநரம்பில் (Myelinated) ஒரு நொடியில் 52 முழத்தில் இருந்து 85 முழம்வரை விரைந்தோடுகிறது. மக்களுடைய நரம்பில் 278முழம் வரை விரைந்தோடுகின்றது.

இந்நரம்பமைப்பில் இந்நரப்பங்களின் கூடல்வாயினை (Synapse) நாம் ஆராய்தல் வேண்டும். ஒரு நரப்பத்தின் கிளைகள் மற்றொரு நரப்பத்தில் கிளர்ச்சியைச் செலுத்துகின்ற இடமே "கூடல்வாய்" எனப்படும். இவ்விரண்டு நரம்புகளுக்கும் தொடர்ச்சி இல்லையானால், அவ்விடத்தில் அவை ஒன்றையொன்று தொட்டேனும் அணமியேனும் இருத்தல் வேண்டும். "இக் கூடல்வாய்" என்பது கள்ளவாயில் (Valve) போல் இருக்கிறது. எலிபிடிக்கும் கூட்டில் கள்ளவாயில் இருக்கிறதன்றோ? அக்கள்ளக் கதவு எலியை உள்விடத் திறக்குமேயன்றி அவ் வெலியை வெளியேவிடத் திறக்காது. அஃதேபோல இக்கூடல்வாயும் நரம்புக்கிளர்ச்சியை ஒரு குறித்தவழியாக விடுமேயன்றி, எதிர்ப்புறமாகச் செலுத்துவதில்லை. கூடல்வாயிலே உயிர்ப்பசை (Protoplasm) யானது தொடர்ச்சியாகப் போகிறதெனக் கூறுவதற்கில்லை. சில கூடல்வாயில் இவ்விரண்டு நரப்பங்களுக்கிடையில் (membranous barrier) பசைத்தோல் தடையானது நிற்கக் காண்கின்றோம். இத்தடையின் இயல்பினை நாம் அறியோம். நரப்பத்தில் கிளர்ச்சியானது, ஓடுவதைவிட இக்கூடல்வாய்வழியாக ஓடுவ

தற்குப் பொழுது மிகுதியாகச் செல்கின்றது. ஆதலினால், அங்கு ஒருவகையான தடையுண்டென்பது ஏற்படுகின்றது. நரம்புகளின் மற்றைய உறுப்பினைவிட இக்கூடல்வாயானது நஞ்சிற்கு எளிதில் இரையாகிவிடுகின்றது. நரம்பின் மற்றைய உறுப்புக்களில் கிளர்ச்சியானது நேராகவும் எதிராகவும் ஓடும்; ஆனால் கூடல்வாயிலோ, ஒரே புறமாக ஓடுமேயன்றி எதிர்ப்புறமாக ஓடுவதில்லை. நரப்பத்தின் உறுப்புக்கள் நைந்துகெடுமானால் அந்நோயானது அந்நரப்பமுழுதும் பரவுகின்றது. ஆனால் கூடல்வாயைத் தாண்டிப் பரவுவதில்லை. ஆகவே இக்கூடல்வாய் ஒருவகையால் நோக்குமிடத்து நரப்பங்களின் மூட்டுவாயாக இருக்க, மற்றொருவகையால் நோக்குமிடத்து ஒரு தடையாகவும் இருக்கின்றது என்பதாயிற்று.

பந்தினைச் சுவரில் எறிந்தால் சுவரில் வீழ்ந்து மடங்கி வருகின்றது. இம் மடக்கு (Reflex action) நம்முடைய செயல்களிலும் காணக்கிடைக்கின்றது. உள்ளங்காலில் மெல்லக்குத்தினால் உடனே காலைமடக்குகிறோம். இது போன்றனஎல்லாம் முதுகுநரம்பின் தூண்டலாலே நடக்கின்றன. சில உயிர்வகைகளின் மூளையைப் பெயர்த்து எடுத்துவிட்டபோதும் அவை சில செயல்களைச் செய்கின்றன. இவை மடக்குச் செயல்களாகும். மூளையில்லாதபோது முதுகுநரம்பொன்றே இருப்பதால், இச்செயல்களைச் செய்து முடிக்க அஃதொன்றே போதும் என்பதாயிற்று. ஒரு தவளையின் மூளையை ஆராய்ச்சியாளர் அறுத்தெடுக்கின்றனர். பின் அதனுடலின் தோலில் ஒரு சிறிது புளிப்பினை (acid) தெளிக்கின்றனர். அப்போதும் அந்தத் தவளை, தனது பின்னங்காலைத் தூக்கி அப்புளிப்பினை அப்புறப்படுத்த முயல்கின்றது. அந்தக் காலைப் பிடித்துக்கொள்கின்றனர்; மற்றொரு பின்னங்காலைத் தூக்கி அப்புளிப்பை அகற்ற முயல்கின்றது. அதுபோலவே ஒருநாயைக் கொணர்ந்து அதன் மூளையை அகற்றுகின்றனர். பின்னர் அதன் முதுகில் ஓர்கட்டையெறும்பைக் கடிக்கவிடுகின்றனர்; கடிபட்ட இடத்தருகே தன்காலைத் தூக்கித் தேய்த்துக் கொள்கிறது அந்நாய்.

இம்மடக்குகள் உடலமைப்பின் இயற்கையால் ஏற்படுவனவாகும். வெளிப்பொருள் தூண்டுகிறது; புகுவாய்வழியாகப் புகுந்த இக்கிளர்ச்சி புலனுணர் நரம்பு வழியாக முதுகுநரம்பினிடம் செல்கின்றது. பின்னர், இயங்கு நரம்புகள் வழியாக வந்து தசைநாரைத் தாக்குகின்றது. அப்பொழுது தசைநாரின் இயக்கத்தால் கால் ஆடுகிறது; புளிப்பை அகற்ற முயல்கின்றது; எறும்பு கடித்த இடத்தில் சொரிய முயல்கின்றது. இந்தத் தொடரில் கண்காணி ஒருவரும் உட்புக வேண்டுவதில்லை; ஒன்றை ஒன்றோடு பொருத்த, நனவோ அறிவோ வேண்டுவதில்லை. நரம்பின் இயற்கை யமைப்பே இத்தனையும்செய்துமுடிக்கின்றதெனலாம். அயர்ந்து தூங்கும்போதும், மயக்கத்தால் நம்மை மறந்து கிடக்கும்போதும், இத்தகைய மடக்குச் செயல்களைச் செய்து நாம் முடிக்கின்றோம் அன்றோ? தாமாகச் செயலுறும் தொடர்ச்சிகள் பல இந்த முதுகுநரம்பில் காணக் கிடக்கின்றன. இயக்குவாயும் புகுவாயும் இவ்வாறு இயற்கையில் தொடர்புண்டு கிடக்கும் தொடர்ச்சியால் நடக்கும் செயல்களே மடக்கு (Reflex) எனப் பெறுவன. மூளையும் முதுகுநரம்பைப் போன்றதோர் அமைப்பே ஆதலின் மூளையைப்பற்றிய செயல்களும் இத்தகையனவே. ஆனால் மூளை வேலையோ மிகவும் சிக்கலானவை எனல்வேண்டும். "புலனுணர் நரம்புகள் மூளையருகே போகின்றன; அங்கே ஆவியார் (Soul) வெளியுலகையுணர்கின்றார். பின்னர்த் தக்கதொரு இயக்க நரம்பை இயக்குகின்றார். அதன் பயனாகத் தொழில் பல நடக்கின்றன?" என்பது வெறுங் கனவேயாகும். மூளையின் நரம்புகளிலும் முதுகு நரம்புகளில் போலப் புகுவா யியங்குவாய்த் தொடர்ச்சி யுண்டு. வெளியுலகத் தாக்கலைப் புலனுணர் நரம்புகள் வழியாகவும் இயக்கநரம்பு வழியாகவும் தசைநாரில் செலுத்திச்செயலுறுத்துவதே எங்கும்காணப்படுகின்றது. அவ்வாறன்றி, ஓர் அழகிய பெண், தான் பாடும் வரிப்பாட்டிற் கேற்ப யாழினை மீட்டி வேண்டிய இடங்களில் யாழ் நரம்புகளைத்தட்டி இன்னொலிஎழுப்புவது போல மூளைக்குள் புகுந்திருக்கும் ஆவியார் புலனுணர் நரம்பையும் இயக்கநரம்பையும் தக்கவாறு தட்டிக்கொண்டு பாடியாடுகிறார் எனக் கனாக்காண்பதால் பயன் என்னை? இதனாலேயே ஆவியார் ஒருவர் இல்லை என்று ஏற்பட்டுவிட்டது எனஎழுந்து யாரும்துள்ள வேண்டா! ஆவியாருக்கு இந்தவேலை ஒன்றுஇல்லை என்றோமேயன்றி அவரே இல்லை எனக்கூற இங்கு ஏது இடம். அப்போராட்டத்தில் நாம் தலையிடப் போவதில்லை.

189082

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்.

(907 வது பக்கத் தொடர்ச்சி)

சூதுபோர்ச் சருக்கம்.

சொல்லிடை நஞ்சு கக்கும்
துன்மதி யுடைய தம்பி
வில்லிடை நின்று தம்முன்
வெம்மனங் களிக்கச் சொன்னா
னல்லிடை நிறைந்த தேனு
மமுதவெண் கிரணத் திங்க
ளெல்லிடை யிரவி முன்ன
ரெவ்வுழி நிகர்க்கு மென்றே.

[சொல்லுஞ் சொற்களிலேயே விஷம் உமிழும் தீய அறிவையுடைய தம்பியான துச்சாதனனும் வில்லவனுராத்தில் இருந்து, தனது தமையனது கொடிய மனம் மகிழும்படி, "அமுதம்போல் வெண்மையான கிரணங்களையுடைய சந்திரன் இராக்காலத்தில் எங்கும் நிறைந்து ஒளிதந்தாலும் பகலில் சூரியன்முன்பு அது எப்படி நின்று அதை ஒத்திருக்க முடியும்" என்று சொன்னான்]

இராமன்பின் பிறந்தவருளரோ வென்னு முலகத்தார்க்கு, அவனுக்குத் தம்பியு முளனென வறிவித்து நிற்கு மிலக்குமணனைப்போல், துரியோதனனுக்குத் தம்பியருளரோவென்று கேட்பார்க்கு அன்னானொருவனுளனென்று தெரிவித்துநிற்பவன் துச்சாதனனே. ஓங்கு புகழ்படைத்த விகர்ணனிருந்தும், அவன் மற்றையவரோடு மாறுபட்ட வொழுக்கத்தினனானமையா லவனைக் கௌரவர்கூட்டத்திற் சேர்ப்பதற்கில்லை. அவனொழிந்த வேனையோரோ, பஃறலை யரவின் நடுத்தலையின் பாங்குநின்ற பணாமுடிகள். அவருள்ளும் துச்சாதனன் துரியோதனனுக்குக் கொடுமையின் வகிரன்னவன்.

திரௌபதி மாலையிட்டசருக்கத்திற் சகுனி துச்சாதன ரடங்கிய சேனையை விவரிக்கவந்த விடத்துக் கவியும்,

சாலும் வஞ்சச் சகுனியோ டெண்ணிய
நாலு மைந்தரு நச்செயி றாகவும்
வாலு மெய்யும் வருக்கங் களாகவும்
மாலும் வெம்பகை யாடர வானதே

[அதிக வஞ்சனையோடு கூடிய சகுனியுடன் சேர்த்து எண்ணப்பட்ட (சகுனி) துரியோதனன் துச்சாதனன் கன்னன் என்னும் நால்வரும், காளி காளாஸ்திரி இயமன் இயமதூதி யென்னும் நான்கு விஷப்பற்களாகவும், படையின் அணிவகுப்புக்கள் வாலும் உடம்புமாகவும் அமைய, ஒலிக்கின்ற கொடிய பகையையுடைய சேனை ஆடுகின்ற பாம்பு போன்றது]

எனத் துச்சாதனனை நச்சுப்பல்லி லொன்றென்றார். அப்பல்தான், நடுவண் புழையுளதா யப்புழையின்வழி யாலத்தைக் கொட்டுகிறதென வியற்கைநூ லுணர்ந்தோர் கூறுவர். ஆகையால் அவன் சொல்லிடை நஞ்சு கக்குந் தம்பியானான். உபமானத்தைக் கூறி யுபமேயத்தைச் சொல்லாதுவிட்ட சகுனிபோ லிவனு மதுவே சிறந்ததென வவனைப்பின்பற்றிப் பிறிதுமொழிதலணியாற் பேசலுற்றான். அந்தண்மை பூண்ட அறவோன் தருமன், தன் றண்ணளியாற் றிங்களுக் கொப்பானான். அவன தருள்நிறைந்த பார்வையும், அமுதவெண்கிரணம்போற் பாரித்தது. ஆயினும், "இரவில் உடுக்களினிடையேபொருந்தியபோது மட்டு மது பொலிவுள்ளது. விண்மீன்களினும் பெரிய கோள்கட் டோன்றியவழி யதுதன் னொளிகெடும். தருமனுஞ் சிற்றரசரிடையே ஒளிமிகுந்து காட்டுகிறான்; அவர்களைவிடப் பெரியோனான உன்னைக் கண்டவழி யவன் சுடரிழப்பான். ஆகையால் நீ வெளிப்போந்து நின துயர்வைக் காட்டுக" என்றான். கடு பிறர்க் கின்னல் தரல்போல், இவன்மொழியும் பாண்டவர்க் கிடர் விளைத்து நின்றது. இவனுக்குப்பின் துரியோதனன் பேசலால் நச்செயிறுகள் நான்குமே, இச்சருக்கத்தில் தலையாய துன்பம் விளைவித்ததற்குக் காரணமாய் நின்றன. இவனது உபமானமும், கன்றியதாய்ச் சிறப்பின்றி யிருத்தலால் சகுனியின் உபமானத்திற்கு ஏற்றதே.

இவ்வார்த்தைகளைக் கேட்ட துரியோதனனும் யாவருங் கேட்பச் சிற்சில வார்த்தைகளைச் சொன்னான். இந்திரன் முதலிய விமையவர்கள் தருமனைப் பெருமைப்படுத்தவும், வேந்தர் யாவரும் அவனேவிய தொழிலைச் செய்துநிற்கவும், மறையின் முறைப்படி யந்தணர் வேள்வியை முற்றுவிக்கவும், போர்நாற்றேர்ச்சிபெற்ற வெள்ளச் சேனைகளுக்கெலா மவனே தலைவனாய் விளங்குகின்றான். இவ்வாறு இப்பெருயாகத்தை முடித்ததனால் அவன் சிறந்த வன்மையாளனாய்விட்டான்.

இனியவன் சின்னாட் செல்லி
னெம்மனோர் வாழ்வுங் கொள்ளுந்
துணைவரும் புரவித் திண்டேர்த்
துணைவருஞ் சூர ரானார்
முனைவரு கூர்முள் வேலை
முளையிலே களையி னல்லா
னனிவர வயிர்த்த போது
நவியமு மடியு மன்றே.

[இன்னும் சில நாட் கழியுமானால் எங்களுடைய செல்வ வாழ்க்கையெல்லாம் கைப்பற்றிக்கொள்வான்; வேகமுடைய குதிரைகளையுடைய வலிய தேரையுடைய அவன் தம்பியரும் மிகவும் வலியராய் விட்டார்கள். கூரான முனையையுடைய முட்கள் பொருந்திய வேலமரத்தை, சிறு செடியாய் முளைக்கும்போதே பிடுங்கிவிட்டாலன்றி, அது முதிர்ந்து வயிரமடைந்தபோது அதைப் பிடுங்கிவிட எண்ணி அதை வெட்டப்புகுந்தால் கோடரியும் கூர்மழுங்கி நுனி மடிந்து போகும்]

இன்னுஞ்சில நாட்களில் எங்கள் செல்வத்தையும் பறித்துக் கொள்வான். ஆதலால்,

போதுற விரைந்து மற்றப்
புரவலன் செல்வம் யாவும்
பேதுறக் கவர்ந்தி லேனேற்
பின்னையார் முடிக்க வல்லார்
மோதுறப் பொருதே யாதன்
மொழியொணா வஞ்ச மொன்று
தீதுறப் புரிந்தே யாதல்
கொள்வதே சிந்தை யென்றான்.

[மேன்மையடையத் தொடங்கிய இக்காலத்திலேயே தருமனது செல்வத்தையெல்லாம் அவன் கலங்கும்படி பறித்துக்கொள்ளாவிட்டால் அவனைப் பின்னால் அடக்க வல்லவர் யாரிருக்கிறார்கள். தாக்கிச் சண்டையிட்டாவது, சொல்லமுடியாத வஞ்சனையால் தீமை புரிந்தாவது அவனது அரசைக் கொள்வது என் எண்ணம், என்று கூறினான்.]

வலிவிலோ வஞ்சனையாலோ அவனது செல்வத்தையும் அரசையும் கொள்வதே கருமம் என்று முடித்தான் துரியோதனன். தம்மின் வலியாரெனக்கொண்டு கருத்தழிந்தானாதலால் அவர்களை வெல்வதே வேலையாகக் கொண்டான்.

உடனே அவனுக் குற்றதுணையாய கொற்றமன்னன் துச்சாதனனும், தமையனது கருத்தை யறிந்து கொண்டு அக்கருத்தை வலிப்படுத்த சில காரணங்களை எடுத்துக் காட்டினான். அவற்றுள் முதலாவது கேட்டோர் மனதைச் சுருக்கிடச் செய்யக்கூடியது.

என்னனு முரிய தம்பி யெழுவதே கரும மின்றே
செந்நெலின் வாளை பாயுஞ் செல்வநா டுடைய கோமா
னென்னலங் கெய்த வீம னகைத்தது நேய மான
கன்னலின் மொழியாண் மூரல் விளைத்ததுங் கண்டிலீரோ

[என்று அரசன் சொன்னதும், அவன் மனதிற் கிசைந்த தம்பியும் "இன்றைக்கே அவன்மேல் படைகொண்டெழுதல் சிறந்தது. செந்நெற் பயிரில் வாளைமீன்கள் பாயப்பெற்ற (வளப்பம் உடைய) நாட்டையுடைய அரசனான துரியோதனன் நேற்று (முன்னாள்) இந்திரப்பிரத்தத்திற்குச் செல்ல அங்கே வீமன் நகைத்ததையும், அன்பு மிகுந்த கருப்பஞ்சாறுபோ லினிய மொழியுடைய திரௌபதி அவனோடு சேர்ந்து சிரித்ததையும் நீங்கள் பார்க்கவில்லையோ]

அக்காலத்தில் பெண்கள் பாவத்திற் குரியவரென்றும், ஆண்மக்களுக்குத் தாழ்ந்தோரென்று மெண்ணப்பட்டபடியால், பெண்பிள்ளையொருத்தி ஆடவனைக் கண்டுநகைப்பி னவனுக்கு மிகவுங் குறைவென்றெண்ணப்பட்டது. இந்திரப்பிரத்த நகரிற்குத் துரியோதனன் சென்று மாயம்வல்ல மயனா லமைக்கப்பட்ட மண்டபம் நோக்கி நடந்தபோது, வழியிற் றாமரைக் குளம்போல் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட தரையைக் கண்டு, உண்மையி லஃதோர் வாவியென மயங்கித் தன்னுடைகள் நனையாவண்ண மவற்றைத் தூக்கி நடந்தான். பின் தன்னறியாமையை நொந்துகொண்டுப் பிறர் நகையாவண்ணம் நடந்துகொள்ள விருப்புக் கொண்டவனாய், மெய்யான தடாகமொன்றைப் பளிங்கென்று நம்பி அதிலிறங்கித் திகைத்தான். இவைகளைச் சேய்மைக்கணின்று நோக்கிய திரௌபதியும் வீமனு முணர்ந்து நகைத்தார்கள். அவரேயன்றி வேறெவருமதைக் கண்ணுறில் நகைத்தேயிருப்பர். அது மானுட ரியல்பு. வீமன் கெக்கலிகொட்டி நகைத்திருப்பினும், திரௌபதி முறுவலித்திருப்பள். அங்ஙன மவள் புன்னகை பூத்தனளென்பது, வீமன் நகைத்தனனென்றும், திரௌபதி மூரல் விளைத்தாளென்றுங் கவி கூறுவதாலேயே கொள்ளலாம். வீமன் நகைத்ததைவிட அழற்பாவை சிறுநகை கொண்டதே துரியோதன துச்சாதனர் மனத்தி லுறுத்தியது.

இந்தச் சருக்கத்திலேயே பின்னால் துச்சாதனன் திரௌபதியைச் சபைக்கழைத்தபோது.

பொன்னைச் சிரிக்கும் பூங்கோயில்
புனல்வா வியிலன் றெங்கள்குல
மன்னைச் சிரித்த செங்கனிவாய்
மாறா திரங்கி யழுதரற்ற
மின்னைச் சிரிக்கு நுண்ணிடையாய்
வேந்தர்க் கெதிருன் மெய்க்கணவன்
தன்னைச் சிரிக்க விருக்கின்ற
சளனீ காணிற் றரியாயே.

[சளம் - நடுக்கம்.]

என்று சொல்லி ஏளனஞ் செய்ததுமுண்டு. இந்திரப்பிரத்தச் சருக்கத்திற் சொல்லவேண்டிய விச் செய்தியைக் கவி அவ்விடத்துக் கூறாமல்விடுத்து, அதைப் புகலுவதற் கேற்ற சமயமாகிய விவ்விடத்தில், சரேலெனக் கூறியது, நாடகக் கவிகளுக்குரிய திறத்தையொத்திருக்கிறது. பறவையும் நிழலுமெனத் துரியோதனனு மிவனு கொடிய காரியங்களிலெல்லாம் மனமொத்திருத்தலின் 'உரிய தம்பி' என்று சொல்லப்பட்டது. இன்றே யெழவேண்டு மென்றவன் சொன்னது, அறிவிற் பெரியாரிவர்களின் செயலைத் தடுக்காதிருக்க. 'செந்நெலின் வாளைபாயும் வளநாடுடைய வரசன்', செல்வத்தி லவர்களுக் கெவ்விதத்திலுங் குறைபா டற்றிலன். அவனைக்கண்டு சிரித்தவர் செருக்கை யடக்குதல் முறையென்று கடாவினான் துச்சாதனன்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

20. கோலங்காண் படலம்.

இரண்டே னிரண் டொன்றேனினு மஃதே.

914வது பக்கத் தொடர்ச்சி.

இராமனேயோவரும் நகர்வலச் செலவுமுற்றிச் சனகர்கோன் இனமணிமண்டபம் இனிது எய்தினார். அவ்வயின், கங்கர் கொங்கராதி மன்னவர் துன்னினர் கணக்கிலர். கரும்பினு மினியசொல்லார் வீசு சாமரை இரட்டவும், மதுமலரோதியர் மழலையா மிசையினோடு பல்லாண்டிழற்றவும், திங்கள்வெண்குடை தண்ணொளி நிழற்றவும் வந்த தயரதன், மாதவர் பாதம் வணங்கி அந்தணாளர் தம் ஆசியொடுசிந்தும் தேமலர் மாரியூடே, இந்திரன் முகம் நாணுறநண்ணி யாங்கோர் இணையில் வீறுடைத் தன் னிருக்கைசேர்ந்தனன்.

அந்தக்காலை, வசிட்டமாமுனிவரன் சனகவேந்தனை இனிது நோக்கி, "மாஇயல் நோக்கினளை ஈண்டுத் தருதி" என வேண்டினான். வேண்டுதலுமவ் வேந்தன் விம்மிய உவகையோடு இறைஞ்சி, 'பெண்ணுக் கரசியைக் கொணர்மின்' எனத் தோழியரை யேவ, அன்னவரும், மன்றல் 'முதலிய பெருங்கருமங்களில் யாவரும் தத்தமக்கிட்ட ஏவலைப் பிறர்க்குரைத்து விடுவாராகும் இயற்கைக்கிணங்க, சீதைதன் தாதியர்பால் செப்பினார்.

மாதுலன் மைத்துனர் மாமியர் முன்னரும், அவர்தம் இளைஞர்க்கெதிரினும், மற்றுள மன்னவர் காணவும், மாதவர் புகழவும், இணையிலா மகிழ்ச்சி இராமன் எய்தவும், சீதையின் அழகு அற்றைநா ளரங்கேறற் குளதென்று அவளைச்சேர்ந்தோர் இதுகாறும் அறிந்திலர்போலும். ஏனெனின், இன்னதன் பின்னரே அவளுக்குக் கலன்களும் கலையுமணிந்து கோலங்கள் செய்திடத் துவக்கலாயினர்.

அமிழ்திமைத் துணைகள் கண்ணுக்
கணியென வமைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலன்க ணங்கை
யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன
வழகினுக் கழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞால
மேழைமை யுடைத்து மாதோ

[ஒளி வீசுகின்ற ஆபரணங்கள் சீதையின் உருவத்தை மறைத்துவிடுகின்றன என்று உணராரேனும், சிறிதுசிறிது அமிழ்ந்து மறைப்பினும் இமைகள் கண்களுக்கு அழகு என்றே அமைந்திருத்தல்போல், அமிர்தத்திற்குச் சுவை யூட்டியது போன்று, அழகிற்கு அழகுசெய்தார். ஒலிக்கின்ற அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட இவ்வுலகம் அறியாமையை உடையதே]

என்று விளம்பியாங்கே கம்பர், சீதைக் கந்நாளவர் கோலஞ்செய்த சூழ்ச்சியெல்லாந் தன் கண்முன்

இன்று காட்சிசெய்து கொள்கின்றார். ஞாலந்தா
னேழைமை சிறிதுடைத்தாயின், அதனைச்செப்புமிச்
செய்யுளோ வஞ்சனை பெரிதுடைத்து. மாபெருங்
கவியாதலால் கம்பர், மிகவு மெளியசொற்களால் தன்
கருத்தினைத் தெளிவிக்கும் மேன்மையராயினர் என்று
செப்புவார் அவர் கரவினை ஓராதார் சிலர். கண்ணிற்
கிமைகள் அழகென அமையுமாபோல் என்ற உவம
வாசகத்திற் கிலக்குயாதெனச் செய்யுளமைப்பி னிலக்
கணம் பிறழாமல் தேர முயலுங்கால் நுண்ணிய
எண்ணங்கள் செறிந்துள அவர் மனத்தினின்று
வெளிவரும் பாசுரங்கள் அத்துணை எளியனவல்ல
வென்பது புலப்படும். அழகிற் கழகுசெய்வ தென்ப
தும் அமிழ்தினைச் சுவைசெய்த லென்பதும் இயலாச்
செயல்களா யிருக்கச் சீதையைக் கோலஞ்செய்யப்
புகுந்த செய்தியில் அன்னதோர் கருமமே தம் தெரி
யாமையால் கைக்கொண்ட வண்ணப்பெண்களைக்குறி
த்தே இஞ்ஞாலம் ஏழைமையுடைத்து எனக் கம்பர்
காட்ட நினைத்திருப்பாராயின், மறைக்கின்ற காரணத்
தா லிமைகள் கண்ணிற்கு அழகு செய்யுமென்றெடுத்
துரைத்த உவமைக்கு இது முற்றிலு முரணுற்று
முடிந்திடுகின்றது. 'மறைப்பது ஓரா' எனப் பாட
மிருக்குமேல், ஓரா என்பதை உடன்பாட்டு வினையா
கக்கொண்டு, 'அழகுக்கு அழகு செய்தார்' என்பதி
லுள்ள செய்தார் என்னும் வினையைக்கொண்டு முடிக்
கலாம். அப்பொழுது, "கலன்கள் மறைக்கு மெனி
னும், கண்ணினிமைபோல், மறைப்பதாலேயே அழகு
ஒருவாறு மிகும் என்ற உண்மையை ஓர்ந்து அத்
தாதியார் சீதையைக் கோலஞ் செய்வான் புக்கனர்"
என்று பொருள்படும். ஆயின், அவர் செய்கை இவ்
வுலகத்தின் ஏழைமைக்கு எடுத்துக்காட் டாகாது.
"யாரே அழகு செய்வார்" என்று குமரபரர் மறுத்
தது பின்னுளாயினும், கம்பருக்கு முன்னரும் இவ்
வித எண்ணம் நிலவியிருந்ததால் போலும், அவ்வாறு
அழகிற்கு அழகுசெய்ய இயலாதென்று எண்ணி
யிருத்தலே இவ்வுலகை அறியாமைக்கு இலக்காக்
கியதென்பது இவ்வாசகத்தின் உட்கருத்தாதல்வேண்
டும். எனினும், 'ஓரார்' என்ற பாடமே கொண்டக்
கால், "இமைகள் இருப்பதால் கண்ணிற்கு அழ
கில்லை. எனினும் அவை மறைப்பதால் கண்ணின
தழகு அமைகின்றது. அவ்வாறே, அணிகலன்கள்
சீதைக்கு இருந்திராத வழகை அளிப்பனவல்ல; அவ
ளுருவத்தை ஒவ்வோரளவு மறைப்பதே அவைகளின்
கருமம். அவளுருவம் ஒவ்வோரளவு மறைக்கப்
பெறுவதால் அவளழகு விளங்குகின்றது. இந்த உண்
மையை அத்தாதியர் ஓராராயினும் அந்தத்தில் அவர்
செய்கை அழகினிற்கு அழகே அளித்தது. அமிர்தத்
தின் தித்திப்பே துய்ப்பவர், இடையிற் சிறிது புளிப்
பேனும் உறைப்பேனுந் தங் நாவிற் களிப்பரேல், அவ்
வமுதின் சுவை முன்னினு மிகுந்ததா யுணர்வார்.
இவையெலாங் கருதின் ஆடை அணிகலன்களால்
சீதையழகு பின்னுஞ் சிறிது அழகே கூடப்பெற்றது.
என்னின், அழகிற் கழகு செய்யவொண்ணா தெனுங்
கொள்கையா லிவ்வுலகமோர் அறியாமையின்பாற்
பட் டுழல்கின்றதல்லால் வேறன்று" என்னக் கலைத்
தொழில்கற்றுத் துறைபோகிய கம்பர் விளம்புகின்
றார். கலைத்திறங் கலந்திருக்கின்றதென்பது தோன்றா
மல் அதனை மறைத்து, இயற்கையா யிருப்பதேபோல்
தோற்றுவிப்பதே கலைவலான் கையில் முற்றிய திற
மையா மென்பர், (The greatest art consists in
concealing art) கலையினதருமை நுனித்துணர்ந்த
மேலோர். இக்கட்டுரையி னுண்மை சீதையழகிற்கும்
அவளைப்பாடிய கம்பர் கவிக்கும் ஒருங்கே பொருந்து
மா றிச்செய்யு ளமைந்திருக்கின்றது.

இவ்வகையவ் வரிவையர்க் கரசியி னுருவினைத்
திருக்கோலஞ் செய்வான் நேர்ந்த சிலதிய ரவளது
சிரமுதற் சீரடிகாறு மணிவன வணிந்திடலாயினர்.
குணத்திற் சிறந்த மேலோர், தாம் நல்லுரைகள் நவில்
வதன்றியும், தம்மாட்டுப் பிறரையும் நல்லுரைகளே
நவில்விப்பார். அழகினு லுயர்ந்தோரு மன்னவரே.
தான் அழகா யிருப்பதுடன் அவ்வழகை உரைக்க
லுறுவார் மொழிகளும் அழகுமிகும்படி யூக்கும்
மேன்மகள் சீதையாதலால், இவள்கொண்ட அழ
கவ்வளவும் கம்பர் பாசுரங்களையு மலங்கரிக்கின்றது.

> கண்ணன்றன் னிறந்த னுள்ளக்
> கருத்தினை நிறைத்து மீதிட்
> டுண்ணின்றுங் கொடிக ளோடி
> உலகெங்கும் பரந்த தென்ன
> வண்ணஞ்செய் கூந்தற் பார
> வலயத்து மழையுட் டோன்றும்
> விண்ணின்ற மதியின் மென்பூஞ்
> சிகழிகைக் கோதை வேய்ந்தார்

[திருமாலினது கருநிறம் இவன் நினைவையெல்லாம் நிரப்
பிப் பிறகு அதனிலு மதிகமாகப் பொங்கி உள்ளிருந்து
கொடிகளாக ஓடி உலகமெங்கும் பரவியது என்று உரைக்
கத்தகும் சீதையின் அழகிய கூந்தலில், ஆகாயத்திலுள்ள
கருமேகத்தின் நடுவில் சந்திரன் தோன்ற இயலுமாயின்
அக்காட்சி எவ்வாறிருக்குமோ அவ்வாறு இருக்கும்படி, சிக
ழிகை மாலையைச் சூட்டினர்.]

எனக் கம்பர் வண்ணப்பெண்கள் புரிந்த பூணணி
பணியைப் புனையத் துவக்குகின்றார். இதனையே
இலக்கணையின்பால், "இருள் துணித்து இடை
இடை யியற்றி வெண்நிலாச் சுருள்துணித்து ஒரு
வழித் தொகுத்தது ஒத்தது" என்பர் திருத்தக்க
தேவர். இன்னபடி இல்பொருளுவமைகொள, "மதி
யினைத் தந்த மேகம் மருங்குறா வளைப்பதென்ன"ச்
சீதையின் அளகபந்தியில் இட்ட பூட்டென்னும் ஆப
ரணம் இருந்தவாறு காட்டிச் செல்வார் கம்பர். திரு
மால் கரத்திருந்த சங்கமே வந்து குடியிருந்தனைய
அவள் கழுத்திலணிந்த ஆரங்களொன்றும் அவளழ
கிற் கியையாமை கருதி, "மானணி நோக்கினார்தம்
மங்கலக் கழுத்திற் கெல்லாம் தான்அணி ஆனபோது
தனக்கு அணி யாது மாதோ!" என வியப்பார். அவ
ளது முலைமேலமைந்த முத்துமாலையை, "நாணத்தால்
தலைகுனிந்து சிறிது முறுவலித்தலால் அவள் பல்லி
லிருந்து வீசித்தவழ்ந்த குளிர்ந்த ஒளியோ" வென
மயங்குவார். பின்னத் தரளங்கள் அவள்தன் திரு
மேனியின் ஒளிகதுவச் சிவந்து காட்டலால், "செய்
யரைச் சேர்ந்துளாரும் செய்யராய்த் திகழ்வரன்றே"
எனத் தேறுகின்றார். "இராமன்தன் கரங்களைப் பற்
றற்கொத்த தவத்தாற் சிறந்தன இவள் கைகளாம்
முளரிகள். ஆதலின் இவை இரவினும் முகிழ்த்தல்
ஒண்ணாது" என்ற சூழ்ச்சியால் இரவினும் பகலினும்
இளவெயில் எறிக்கும் மணிகள் செறிந்த கடகத்தை
அவள் கைகளுக் கணிந்தனர் என்பர். வஞ்சமும்

களவும் இன்றி மழையென மதர்த்த அவள் கண்க
ளின் கருமை, தீட்டியமையால் தோன்றியதோ மற்று
இராமன் நிறமே அங்குத் தங்கியிருத்தலால் விளங்கு
கின்றதோ, என்றயிர்ப்பார்.

சனகன்தரு பெருமகளின் திருமார்பில் தொய்யி
லுருவங்கள் தீட்டினா ரச் சிலதியர்; இதனாலவர்,

> பல்லியல் நெறியிற் பார்க்கும்
> பரம்பொரு ளென்ன யார்க்கும்
> இல்லையுண் டென்ன நின்ற
> இடையினுக் கிடுக்கண் செய்தார்

என்னச் சாதிப்பார் கம்பர். பரம்பொருளைக் கொள்
வதுபோன்றே யாவரும் சீதையின் இடையையும்,
அது கட்புல னாகாவிடினும், உண்டென்றே கொள்
வர். மோகத்தால் மூக்கிழந்து மோசமே செய்ய வந்த
தங்கையின் சொற்களாலே மையலுண்டுழன்ற இரா
வணனு மிந் நங்கையி னுருவெளித்தோற்றத்தைக்
குறித்து, "இடை கண்டிலம் அல்லது எல்லா உரு
வும் தெரிந்தாம்" என்று உரைத்ததால், கண்டிடா
விடினும் இடை உண்டென்ற கொள்கையனே
யாகின்றான். ஏனெனில் அவன்

> "புடைகொண்டெழு கொங்கையு
> மல்குலும் புல்கிநிற்கு
> மிடைகண்டில மல்லதெல்லா
> வுருவுந் தெரிந்தாம்"

என்பதால், மற்ற வுறுப்புக்களின் அமைப்பைக்
கொண்டு அநுமானப்பிரமாணத்தினால் கூறுகின்றா
னாதலின், அவ்வாறு பார்ப்பார்க்கு உளவாகும் பரம்
பொருளைப்போல் அவனுக்கும் இம்மாதி னிடைஇரு
க்குமென லாயிற்று. அவனிளையவள், சீதையின் பிற
வுறுப்புக்களைக் கண்டு ஆய்கின்ற கருத்துடைய நிலை
யில் இருந்திலளாகையால், மூக்கில்லாத் தன்னொடு
இலக்குவன் இணங்குவதன் அமைதிக்கு ஆதாரமே
காட்டும் சூழ்ச்சியில் இராமனைநோக்கி, "மருங்கிலாத
வளோடு மன்றோ நீ நெடுங்காலம் வாழ்ந்ததென்பாய்"
எனச் சாற்றுங்கால், காட்சிப்பிரமாணமே கொண்டு
பார்ப்பார்க்குப் பரம்பொருள்போல் சீதையிடையும்
இல்லாததாயிற்று. அல்குலுங் கொங்கையுங் கண்ட
இராவணன், இவையிரண்டையு மிணைப்பதற்கோ
ரிடை தென்படாவிடினுமுண்டென்றனுமானிப்பான்.
இடையை மட்டுமே நோக்கப்புகுந்து அது தென்
படாமையால் இலதென்று மறுப்பாள் சூர்ப்பணகை.
இல்லையுண்டென் றிந்நங்கைமருங்குல் நின்றவாறிவ்
வாறு என்பதைத் தன் பாத்திரங்களைக்கொண்டு
காட்டிய கம்பர், தானும் சூர்ப்பணகையைப்போல்
வியப்பொன்றேகொண்டு சீதையை நோக்குபவரா
தலால் தன்கூற்றா யுரைக்கும்போது, "மருங்கிலா
நங்கை" யென்று மறுத்தும், "பொய்யோ என்னும்
இடையாள்" என்று அயிர்த்தும், அவளுக்கு 'நுசுப்
பொன்றிலது' என்னுங் கட்சியைச் சேர்ந்துகொள்
கின்றனர்.

இனிச் சீதை சிலம்புக ளணியப் பெறுகின்றாள்.
அவைகளோ, "இவளது பஞ்சின்றிப் பழுத்த பாதம்,
ஐயவாம் அனிச்சப்போதின் அதிகமும் நொய்ய!
நொய்யவே நொய்ய!" என்று பலபட நுவல்கின்ற
னபோ லொலிக்கின்றனவாம். சில்லரி மணிகளென்
னும் செந்நாக்கொண்டு தக்கார்க்குத் தக்க தன்மை
யைச் செப்புகின்ற இச்சிலம்புகளின் அறிவு சீரிது.
மாலையிலிற்றுந் தேன்பருகச் சுற்றிப் பறக்கும் வண்டு
கள் தம் அஞ்சிறகால் வீசும் சிறுகாற்றிற்கு ஆற்றாது
தேய்ந்துளதேனும் நுண்ணிடை யொன்று தமயந்
திக்கு உண்மையால், அவள் அடியிணை கிடந்தசிலம்பு
கள், "மோட்டிளங்கொங்கை முடியச்சுமந்தேற மாட்
டாது இடை" என்று வாய்விட்டாற்றின வென்பர்
புகழேந்தி. திருத்தக்கதேவர்,

> கோமக ளுருவமாய்க் கூற்றம் போந்தது
> போமினும் முயிருயக் கொண்டு போய்மனங்
> காமின மெனக்கலை சிலம்பு கிண்கிணி
> தாமனும் வாயினாற் சாற்று கின்றவே.

["எமன்தான் இவ்வரசகுமாரியின் வேடம்பூண்டு உங்
களைக் கொல்லவருகின்றது. ஆதலின் உங்கள் உயிர் பிழைக்
கப் போய்விடுங்கள். போய் அங்கு மனமும் வருந்தாமல்
காத்துக்கொள்ளுங்கள்" என்று மேகலையும் சிலம்புகளும்
சலங்கையும் தம் வாயினால் மிகவும் சாற்றின]

என்று இலக்கணையார்திறத்தில் எடுத்தியம்புவார்.
தன்னைக் காண்பார்பா லெல்லாம் காமமூட்டி யவர்தம்
உயிரைவாட்டுங்கொடுங்கூற்றமோ, மலர்த்தவிசிகந்து
மண்ணிடை வந்தருளுமிச் சீதைதா னாகாள். மண்ட
பத் தகவயின் இந்த,

> நைவள நவிற்றுமொழி நண்ண வரலோடும்
> வையநுகர் கொற்றவனு மாதவரு மல்லார்
> கைகடலை புக்கன கருத்துளது மெல்லாம்
> தெய்வமென வுற்றுவுடல் சிந்தைவச மன்றோ.

[நைவளம் என்னும் பண்போல் பேசுகின்ற சீதையான
வள் நெருங்கி வந்தவுடன், பூமியை ஆண்டு அனுபவித்த
தயரதனும் சனகனும், உண்டு காத்த இராமனும், முனிவர்
களும், தவிர, ஏனையோர் கருத்தெல்லாம் அவளைத்தெய்வ
மெனக்கொண்டு அவரது கைகள்எல்லாம் அவளைக் கும்
பிட்டு வணங்குதற்கு அவரவர் தலையிலே தாமாகவே
சென்று குவிந்தன—உடலின் செய்கை சிந்தைக்கு வசப்
பட் டிருக்கின்றதன்றோ.]

தெய்வமென்றே தன்னைத் தோற்றுவிக்குந் தன்மைய
ளாதலின், கண்ட வரிவளைக் கும்பிடுவா ரல்லாது
கூற்றென் றஞ்சிடா ரென்பதுன்னி இலக்கணையின்
சிலம்பினிற்கெதிராய் இவள்பாதம்பற்றிய நூபுரம்
யாதும் அச்சுறுத்தலின்றி அன்னாள் நொய்மையையே
பலபட நுவன்றது.

இவ்வாறு யாவரும் சீதையைத் தம் சிரமேற் கைகு
வித்து வணங்கினாராக அவளுக்குக் கோலஞ்செய்த
வண்ணமகளிரும் வேறு உழையிருந்த பெண்களும்,
அவளழகை மாந்தினராய்த், "தஞ்சொற்கள் குழறித்
தந்தம் தகைதடுமாறி நின்றார்" என்றும் "களிமயக்
குற்றுநின்றார்" என்றும் கம்பர் காட்டுகின்றார். சீவக
சிந்தாமணியிற் சொன்னதுபோல் இவர் "ஆண்விருப்
புற்று நின்றார்" என வெள்ளையா யிங்குச் சொல்லா
திருத்தல் பாராட்டற்பாலதே. ஆயினும், பின் இன்ன
வரிடை சென்றதும் இவளை அங்கிருந்த யாவரும்
தெய்வமெனக் கும்பிடற்கிருக்க இம்மகளிரோ மனம்
வேறுபட்டுக் களிமயக்குற்றும் தகைதடுமாறியும் நிற்
பானேன்! மிகவும் நெருங்கிப் பன்னெடுநாள் பழகியு
ளராதலால் இத் தோழியர்முதலானோர் 'கோயிற்
பூனை கடவுளிற் கஞ்சாது' என்னுந் தன்மையராயின
ரென்பதிற் சிறப்பில்லை கம்பர் இச்சந்தர்ப்பத்தில்,

"மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்பது ஒன்றேயன்றோ" என்றும், "விரும்பற் கொத்த தழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்" என்றும் வேற்றப்பொருள்கள் இரண்டு வைத்துளர். பின்னது மாந்தரியல்பைப் பொதுப்படக் கூறியதேயன்றி வேறன்று. மற்று முன்னதிலுள்ள "அன்றோ" எனும் வினை மயக்கத்திற் கிடனாகின்றது. "கண்ணிற் காண்பரேல் ஆடவர் பெண்மை அவாவுந் தோளினாய்" என முன் கோசிகமுனிவன் இராமனைப் பாராட்டியதையும், இங்குச் சீதையைக் கண்டபெண்டிர் களிமயக்குறுவதையும் மருங்குவைத்து ஒப்புநோக்குங்கால், தத்தம் தகைதடுமாறல் மைந்தர் மாதர் என்னும் இருபாலர்க்கும் உரியதோர் மனத்தின் செய்தியே என்று அறிவுறுத்தித் தேற்றுவதுபோல் நிற்கின்றது. அவ்வினை மற்று, மண்டபத்திருந்த மைந்தர்கள்சீதையைக் காணச் சிரமேற் கரங்குவித்தனரென்றும் வண்ண மாதர் களிமயக்குற்றுத் தகைதடுமாறினரென்றும் அடுத்தடுத்துக்காட்டலால், "இருபாலார்க்கும் மனத்தின் தன்மை ஒருவகைத்து என்று, உரைப்பவர் உரைப்பதெல்லாம் மெய்யென்று கொள்வதற்கில்லை போலும்" என்னும் ஐயுறவு தோன்ற, 'மனம் ஒன்று அன்றோ, இரண்டோ" என்று வினவுதலுமாகும்.

இன்னணம், ஆடவர்க்கும் மகளிர்க்கும் மனம் ஒன்றேயன்று என்று தோன்றுமாறு, தாம் கன்னிமாடத்தில் முன்னாள் கண்ணுற்றுக் காதல்கொண்டவர் ஆவரோ இன்று மணங்கொளநிற்பவர் என்றெஞ்சிய சிறு ஐயத்துடனேயே இதுகாறுமிருந்த சீதையும் இராமனும் எதிர்கொண்டு இங்கு நோக்கிடு மெல்லையில்,

நறத்துறை முதிர்ச்சியுறு நல்லமிழ்து பில்குற்
றறத்தின்விளை வொத்துமுக டுந்தியரு குய்க்கும்
நிறத்துவ ரிதழ்க்குயில் நினைப்பினிடை யல்லால்
புறத்துமுள தோவென மனத்தொடு புகன்றான்

ஆதலால், நேரிற் கண்டபின்னும், "ஒருகால் இத்தோற்றம் என் மனஞ்செய் மாயந்தானோ. என் காதலுக் குரியவனே வருகின்றா னென்னுமிது இன்னும் பொய்யாயினுமாமோ" என இராமன் வெளியிலியங்கு மொன்றை உள்ளத்தின் செய்தியோ என்றயிர்க்கச் சீதையோ,

கணங்குழை கருத்தினுறை கள்வனென லானன்
வணங்குவி லிறுத்தவ னெனத்துயர் மறந்தாள்
அணங்குறு மவிஞ்சைகெட விஞ்சையி னகம்பா
டுணர்ந்தறிவு முற்றுபய னுற்றவரை யொத்தாள்

ஆகி, உள்ளத்திலிருப்பதையே புறத்தே கண்டனளெனத் தெளியு மெய்ஞ்ஞான முடையவளாயினாள். அறிவினது ஆற்றல் ஆண்பாலர்க்கும், உணர்வினது உண்மை பெண்பாலார்க்கும் அதிகமென வரைவர் ஒருசாரார். புலன்களால் ஆய்ந்தறியும் அறிவினோடு என்றும் ஐயமும் தொடரும்; உணர்வினால் உற்றறியும் அறிவுதானே ஐயமறத் தேர்வதாம் முற்றிய பயனுடைத்து. இராமன் புறமெலா மகமோவென ஐயுற்றான்; சீதை அகமே புறம் எனத் தேர்ந்தாள். இவையிரண்டும் மனநிலையாதலால், 'மைந்தர்க்கும் மாதரார்க்கும் மனம் என்பது ஒன்றோ அன்றோ' என ஐயுற வினவுதல் நேரிதே. மற்று, அகமே புறம் என்றாலும் புறமே அகம் என்றாலும் அந்தத்தில் இரண்டுமே ஒன்றாகும் நெறிநோக்கி நிற்றலால், கருதுமுறையில் வேற்றுமையிருப்பினும் எய்துமுடிவு ஒன்றேயாகின்றது. ஆதலின் அந்த ஓகாரம் அறிவுவினா என்றாலும் ஒக்கும்.

இராமனுஞ்சீதையும் இன்னவா றொருவரையொருவர் காணவும், சிலர்தம் சிரமேல் கரங்கள் குவிக்கவும் நேர்ந்தபோது தயரதன், உலகடங்கலும் ஒருகோலோச்சித் தன் சக்கரமுருட்டுஞ் செல்வ முடையனாயிருப்பினும் சானகியாம் 'இவளை மருகியாய் எய்தப்பெற்ற இந்நாளே எனக்குத் 'திரு' வெய்தியது' என மகிழ்ந்தான். திருவென்று இவளை உபசரித்தான் தயரதனாயின், தனிமுதற் கடவுள் திருமாலே இராமனெனத் தேர்ந்திருந்த வசிட்டன், அவ்விராமனுக்குத் தேவியாய் வருமிவள் திருமகளே என்று உவக்கலானான். மற்று

அச்சென நினைத்தமுத லந்தண னினைந்தான்
பச்சைமலை யொத்தபடி வத்தட லிராமன்
நச்சுடை வடிக்கண்மலர் நங்கையிவ ளென்றால்
இச்சிலை கிடக்கமலை பேழையு மிறாதோ

[இராமனைத் தன் உயிரென்றே பாவித்திருந்த விச்வாமித்திரன். "விடமுடைய நீண்ட கண்மலர்களோடுகூடிய நங்கை இவளே, அச் சிவன்வில்லிற்கு இலக்கு என்று இருந்தபோது, இந்த வில்கிடக்க ஏழு மலைகளையும் ஒடிக்க வேண்டுமெனின் ஒடிக்கமாட்டானோ" என்று நினைந்தான்]

யாவர் வாசகம் இதுஎன்று கம்பர் பெயர் குறிக்காமல் 'அச்சென நினைத்த முதலந்தணன்' என்ற மட்டுங் கூறினாராயினும், அச்சு என்பதற்கு 'உயிர்' என்ற பொருள் இருப்பதாலும், "காதல் என்றன் உயிர் மேலும் இக்கரியோன்பால் உளது" என்று முன் சனகனிடம் கூறியிருப்பதிலிருந்தும், வசிட்டனது நினைவை வேறிங்கு வகுத்திருப்பதாலும், கோசிகற்கே இது உரியது என்று கொள்ளல் வேண்டும். இவ்வண்ணம் யாவரும், கண்டும் நினைத்தும் மகிழ்வுற்றிருந்தவேளை, தயரதன் கௌசிகனை நோக்கி, மேலோய்,

"வல்லிபொரு சிற்றிடை மடந்தைமண நாளாம்
எல்லையி னலத்நபக லென்றுரைசெய் கென்றான்"

சீதையைக் கண்களாற் கண்டவுடன் தயரதன் இராமனினும் அவள்மாட்டு உறவும் அன்பும் ஒரு படி அதிகங் கொண்டிருந்ததாலோ, இராமனுக்கு மணவினைநாள் குறிக்கக்கூறாது சீதையின் மணத்தையே முன்னிஇனிப் பேசலாயினான். இதனிற்கிணங்கப் பன்னெடு மாண்டுகளுக்கப்பால், மந்திரக்கிழவர்முன் தனதுள்ளத்தை இவன் தெரிவித்த காலையினும்,

"பெருமகன் என்வயின் பிறக்கச் சீதையாம்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்"

எனச் சீதையின் மணத்தை நினைத்தே கொண்டாடி வருவதாகக் கூறியிருக்கக் காண்கின்றோம். இராமன் தன்வயின் பிறந்ததால் தயரதன் தான்பெற்ற பாக்கியங்களுள் முதன்மையானது சீதையின் மன்றல் செய்யக்கண்டதே.

இதுகேட்டு முன்னரே கணித்துத்தான் வைத்திருந்தானெனக் கோசிகன், "அந் நன்னாள் நாளையே" என நவின்றனன். யாவரு மிதன்மேல் தத்தமிட மெய்தினர்.

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச் சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1-0-0. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3-0-0. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்த நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலாநிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும் விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பில் அட்டவணை மாத்திரம் முந்நூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0-12-0. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

„ சாதாரண கட்டடம் „ 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்.

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

பாலகாண்டம்	ரூ	5	0
அயோத்தியாகாண்டம் ...		5	0
ஆரணியகாண்டம்		4	0
கிட்கிந்தாகாண்டம் ...		4	8
சுந்தரகாண்டம்		5	0

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர். ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனாக எழுத ரூ 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். ஏழு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ. 1. ஜாதகம் குறிக்க ரூ 2. மரணத்தைப்பற்றி வருஷ மாதம் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ. 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ. 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

'அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன். அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது' என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்.

அப்பாஜி ஜோஸ்யர்,

321, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

கௌசிக சிரோ கல்பம்

உங்கள் சிரோகத்திற்கு மிகவும் ஆரோக்யத்தைத் தரக்கூடிய தைலத்தை நீங்களே செய்து உபயோகியுங்கள்.

போலித்தைலங்களையும் குணமற்ற எண்ணெய்களையும் (Hair Oils) விலைகொடுத்து வாங்கி ஏமாறாதீர்கள்.

கௌசிக சிரோகல்பத்தைப் பசும்பாலில் கரைத்துச் சரியளவு சுயமான நல்லெண்ணெய் சேர்த்து நெருப்பில் கொதிகவைக்க ஜலம் பூராவும் சுண்டிச் சுத்தமான தைலம்மட்டும் தனியாக நிற்கும். இத்தைலத்தை எடுத்து ஒருமண்டலம் உபயோகிக்க, மண்டையிடி ஒற்றைத்தலைவலி கண் எரிச்சல் மூளைக்கொதிப்பு இன்னும் சிரம்நேத்திரங்கள் சம்பந்தமான எல்லாவியாதிகளும் போய்விடும்.

பாக்கெட் ஒன்றிற்கு விலை அணா, 8, தபாற்கூலி வேறு இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை,

மனேஜர்:—சேலம் ஸ்டோர்ஸ்,

சேலம்—SALEM.

வர்த்தமானம்

திருச்சித் தமிழ்ச் சங்கம்:— இந்த மாதம் திருச்சியில் செயிண்டு ஜோஸப் கல்லூரி மண்டபத்தில் கூடிய தமிழ்ச்சங்கக் கூட்டத்தில் ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் 'தமிழ் முன்னும், பின்னும்' என்னும் விஷயம்பற்றி நிகழ்த்திய பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு:—

"தமிழர் நெடுநாட்களாக ஆரியர்களோடு சேர்ந்து வாழ்ந்தனரேனும் அவ்விருபாலரும் ஒத்த பழக்க வழக்க முடையவரல்லர். மணமுறையை யெடுத்துக் கொள்வோம். தமிழர் மணம் காதற்றுறை போயது. களவுமணமே சிறந்ததென வதைத் தமிழர் கொண்டொழுகினர். தொல்காப்பியம் முதலிய பண்டைத் தமிழ்நூல்களில் இதற்குச் சான்றுகள் பலவுள. அகப்பொருளைப் பற்றிக்கூறும் நூல்கள் யாவும் மணவாழ்க்கையைக் களவியல் கற்பியல் என இருகூறுகப் பிரிக்கின்றன. களவியல், இளமையும் எழிலும் உருவும் திருவும் சேர் வாய்ந்த வோராடவன், ஒத்த வன்பும் நலனும் பண்பும் வாய்ந்தவோர் நங்கையைக் காதலிக்கும் தன்மையும், கூடிய காதலர் பிரிவதால் ஏற்படும் துன்பமும், செவிலியால் விஷயமறிந்த பெற்றோர், பெண்ணின் விருப்பம் சென்றவழி நின்று மணத்தை முடிக்கும் செவ்வியும் விளக்கப்பெறும். தலைமகனும் தலைமகளும் இல்லறம் நடத்தும் முறையும், தலைவனது பிரிவும், கூடலும் ஆயபல கற்பியலில் கூறப்பெறும். எனவே இதனின்று பண்டைத்தமிழர் மணப் பெருமையைத் தெளிதலரிதன்று. தலைவனும் தலைவியும் நேசங்கொண்டு, பின் மண முடித்துக் கொள்வதால் இல்லறம் சிறப்புறும். இல்லையேல் வாழ்க்கையில் சண்டையும் சச்சரவும் வளருமன்றோ? தற்கால மணமோ ஆரியர்முறை பற்றிய மணமாய் விட்டது. ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் அறியார். தகப்பனும் தாயுமாய் மணத்தை முடித்து விடுகின்றனர். தகப்பன் கல்வியை விரும்புவான், தாய் செல்வத்தில் நாட்டம் வைப்பாள், பெண்ணோ இளமை, எழில் இவற்றை விரும்புவாள். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை நினைத்திருக்க மணம் நடக்குமாயின் இல்லறம் எப்படி யின்பம் தருமொரு சாதனமாகும். இப்பொழுது களவியல் மணம் வழக்கற்றுப் போய்விட்டது. ஆரியர் முறையைத் தமிழர்கள் பின்பற்றி வருகின்றனர். மணமுறை சிதைவுற்றது போலவே இலக்கியமும் தன் நெறி குன்றிவிட்டது. சங்ககாலங்களில் தோன்றிய நூல்களனைத்திலும் இயற்கை நலங்களும், உவமைநயமும் செறிந்திருந்தன. சங்கப்புலவர் கண்டதைக் கண்டவாறு கூறுவர். மேலும் பண்டை நூல்களில் இயற்கையோடியையா வருணனைகளும், செயல்களும் இரா. பிறகு கற்பனைதோன்ற இயற்கை நயங்கள் குன்றின. கம்பருக்குப் பின்வந்த புலவர்களோ வடமொழி நூல்களைப் பின்பற்றலாயினர். சமீபகாலத்தில் தோன்றிய புலவர்களோ, தங்கள் ஆற்றலையெல்லாம், நாகபந்தம், சிலேடை, வெண்பா, யமகம், அந்தாதி முதலிய கவி பாடுவதில் செலவழித்தனர். ஆகவே இயற்கைநயம் நூல்களினின்று அகன்று விட்டது."

பிறகு பிரசங்கியார் தமிழ்ப்பண்டிதர் நிலையைப் பற்றியும் மாணவர் உத்தியோகப்படிப்பிலே மாத்திரம் நாட்டம் வைத்திருக்கலாகாதென்றும், தமிழ்க் கல்வியை வளர்க்கவேண்டிய அவசியத்தையும் எடுத்துக் கூறினர். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவு பெற்றது.

ஜனநாயகமும் கல்வியும்:— திருவநந்தபுரம் சமஸ்தானக் கல்வி இலாக்காத் தலைவர் ராவ்பகதூர் K. V. இரங்கசாமி ஐயங்கார், சென்றவாரம் பிரிஸிடென்ஸி காலேஜின் சரித்திரசங்கத்தின் கூட்டத்தில், ஜனநாயக ஆட்சியும் கல்வியும் என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசிய சுருக்கம் வருமாறு:—

மாணவர் படித்துப் பட்டங்கள் பெற்று உத்தியோகத்திற்கென அலையும் பரிதாபமும், ஜனநாயக அரசியல்முறையின் போக்கும் என்னைத்தளர்ச்சியுறச் செய்கின்றன. நாம் கல்விக்கெனச் செலவிடும் பணத்திற்கேற்ற பயன் ஒன்றும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. ஆகவே நாம் இதுபோது கையாளும் கல்விமுறை பயனற்றதாகத் தோன்றுகின்றது. இதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். ஜனநாயக ஆட்சியின் பலன் இதுதானே வென்று எண்ணுங்கால் நம்பிக்கை தளர்வுறுகின்றது. இந்தியாவிலும் ஜனநாயகமுறைநிலைத்து விட்டது. ஜனநாய ஆட்சியின் தீமைகள் பல. முதன் முதலாக அரசாங்க நிர்வாகச்செலவு அதிகமாகின்றது. ஜனங்கள் நற்குணங்களை இழந்துவிடுகின்றனர். கர்வம், போட்டி, பொறுமை, கட்சிச்சண்டை, லஞ்சம் வாங்குதல், உத்தியோக நியமன ஊழல்கள் ஆயவை ஜனநாயகம் தந்தவை. எனினும் நம்மை நாமே யாண்டு கொள்கின்றோம் என்ற திருப்த்தி யொன்றிருக்கின்றதாம். இவ்வளவு சீர்கேடான நிலைமைக்கு ஜனநாயகம் காரணமாயினும் பல அரிய சௌகரியங்களும் அவ்வாட்சிமுறையில் இருக்கின்றனவாம். ஜனநாயகம் ஜனங்கள் ஆதரவிலும் அவர் போராலும் நடைபெறுகின்றது. ஜனநாயகம் விரிவடையின் ஜனங்களின் சிரத்தையும் விரிவடையும். அப்பொழுது அரசாங்க நிர்வாகத்தில் குறையிருக்குமானால் ஜனங்கள் அவைகளைக் கண்டிப்பர். ஜனங்களின் அதிருப்தி அதிகரிக்குமாயின், நிர்வாகமும் மாறுதலடையும். இதுதான் புரட்சி. இப்புரட்சிஇரத்தப் பெருக்கிலாது ஏற்படுவதற்கு ஜனநாயகம் துணையாயிருக்கின்றது. இங்கிலாந்தில் அரசாங்கத்தை நிர்வகிப்பவர் சரியே ஆளாவிடின் தேர்தலில் விலக்கப்படுகின்றனர். பின்னர் வேறொருவர் தேர்ந்தெடுக்கப் படுகின்றார். இதனால் போரில்லாது அரசாங்கம் மாறுதலடைகின்றது. எனவே ஜனநன்மைக்கானபடி சண்டையில்லாமல் ஜனங்கள் அரசாங்கத்தில் மாறுதல் ஏற்படச்செய்ய வசதி தருவதே ஜனநாயகம்.

இவ்வரசு சரிவர நல்லவழிபற்றி நடக்கவேண்டுமாயின் ஜனங்கள் கற்றிருக்கவேண்டும். மனிதனின் நற்குணங்களை வளர்த்துவைப்பதே கல்வியின் வேலை. அப்படிச் செய்தால் ஜனங்கள் தங்கள் பொறுப்பை அறிந்து சரியான மனிதனுக்கு ஓட்டுக்கொடுப்பர். நாவன்மை படைத்தவன் அதிகாரத்திலிருந்தால் நாவன்மையால் ஜனங்களைச் சரிப்படுத்தித் தன்னிஷ்டப்படி நடத்துவான். ஜனங்கள் சரியான கல்வி பெற்றிருப்பின் ஜன அபிப்பிராயமே ஏற்கப்படும், நாவன்மையால் முழங்கிவிட முடியாது. ஆகவே கல்வி வேண்டும். அக்கல்வியும் மனிதனை உயர்ந்த சுவபாவ முள்ளவனாகச் செய்ய வேண்டும். ஜனநாயகப் பொதுஜன அபிப்பிராயத்தை எதிர் பார்க்குங்கால் சரியான அபிப்பிராயம் கொடுக்கவல்ல பயிற்சி ஜனங்களுக்கு வேண்டாவா? எனவே மைசூரில் அனுஷ்டிப்பதுபோல் கட்டாய உயர்தரக் கல்வி ஏற்படவேண்டும்.